உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான திறவுகோல் பக்கம் 3

சந்ததிகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும் பக்கம் 9

700 இறை கட்டளைகள் பக்கம் 18

மார்க்க அறிவுப் புத்தகம் (தொடர்-7) - - சிறுவர் பகுதி - - பக்கம் 22


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | May 2023 | Vol. 2 - Issue No. 6
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலின் புதிய தோற்றம்





# திருக்குர்ஆன்

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ

அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளான்.... (24:56)



# ஹதீஸ்

عَنْ حُذَيْفَةَ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ تَكُوْنُ النُّبُوَّةُ فِيْكُمْ مَّاشَاءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ مَاشَاءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا عَاضًّا فَتَكُوْنُ مَاشَاءَ اللّٰهُ اَنْ تَكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ مُلْكًا جَبْرِيَّةً فَيَكُوْنُ مَاشَاءَ اللّٰهُ اَنْ يَّكُوْنَ ثُمَّ يَرْفَعُهَا اللّٰهُ تَعَالٰى ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ ثُمَّ سَكَتَ۔

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பின்னர் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும். பிறகு மௌனமாகி விட்டார்கள்.”

(முஸ்னது அஹ்மது தொகுதி 5 பக்கம் 404)

# உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான திறவுகோல்




ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலின் புதிய வளாகத்தைத் திறந்து வைத்து அமைதிக் கருத்தரங்கில் நிகழ்த்திய சொற்பொழிவு

தமிழாக்கம்: J.S. சலீம் அஹ்மது

இலண்டன் - மார்ச் 4, 2023 - தொன்றுதொட்டே, எல்லாம் வல்ல அல்லாஹ் எப்பொழுதும் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்கு ஓடோடி உதவி செய்து வந்துள்ளான். நம்பிக்கையாளர்கள் ஏன் துன்பங்களை சந்திக்கின்றனர் என்று எதிரிகள் பரிகாசம் செய்யலாம். அல்லது கேள்விகள் எழுப்பலாம். ஆனால், இறையச்சம் உடையவர்களே இறுதியில் வெற்றியடைகின்றனர்.

2015-ஆம் ஆண்டு செப்டம்பர் 26-ஆம் நாள், பைத்துல் ஃபுதுஹ் பள்ளிவாசல் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாத்தும் அத்தகைய துன்பத்தை எதிர்கொண்டது.

முக்கிய நிர்வாக அலுவலகத்தைத் தீ பற்றிக் கொண்டதால் வழக்கமாக பள்ளிவாசலுக்கு வருபவர்களும் பொதுமக்களும் அதிர்ச்சியுடன் இதைக் கண்டனர். சில தனிப்பட்ட நபர்கள் இந்த விபத்தைப் பரிகாசம் செய்யும் விதமாக நடந்து கொண்டனர் என்பது வருந்தத்தக்கது.

எவ்வாறிருப்பினும், ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களது பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கு இத்தகைய இடையூறுகள் தடையாக இருப்பதற்கு இடம் கொடுக்கவில்லை. மாறாக இதைவிட இன்னும் பெரியதாக இன்னும் சிறந்ததாக புதிய பள்ளி வளாகத்தைக் கட்டுவதில் திட்டமிட்டு முன்னேறத் தொடங்கினர். 2018-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி, ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களால் புதிய கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பணிகள் முழு வீச்சில் நடைபெறத் தொடங்கின. இந்நாள் அந்த மாபெரும் முயற்சி நிறைவு பெற்றதற்கான அடையாளமாகத் திகழ்கிறது. மேலும் அல்லாஹ்வின் அளப்பரிய கருணை, ஜமாஅத்தின் தளராத நம்பிக்கை மற்றும் மன உறுதி ஆகியவற்றுக்கும் இந்நாள் ஓர் அடையாளமாக உள்ளது.

இவ்வாறு தற்காலிக இடையூறுகள் ஏற்பட்ட அந்நாட்கள் முழுவதும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு ஆறுதல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கிக் கொண்டே இருந்தார்கள். மேலும் மீண்டும் அதைக் கட்டுவதற்காக அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களை பொருளாதார தியாகத்தில் பங்கேற்குமாறும் ஊக்கமூட்டினார்கள். இதற்கு செவியேற்றவாறு வழக்கம்போல் அஹ்மதிகள் முழு மனதோடு நன்கொடைகளை வாரி வழங்கினர். 2017-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி ஹுஸூர் அவர்கள் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறியிருந்தார்கள்:

“நான் முன்னரே கூறியிருந்தது போன்று இந்தப் பள்ளிவாசல் கட்டுவதற்கு இதற்கு முன்னர் தியாகம் செய்ய இயலாத மக்கள் இப்பொழுது இத்திட்டத்தில் பங்கெடுக்க முயற்சி செய்யட்டும். அவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதி தொகையினை மூன்றாண்டு காலத்திற்குள் செலுத்த முயற்சிக்க வேண்டும். வாக்குறுதியின் மூன்றில் ஒரு பங்கு தொகையை முதல் வருடத்திற்குள் செலுத்தி விட முயற்சிக்க வேண்டும்.”

ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 02.10.2015 ஜுமுஆ பேருரையின்போது, நெருப்பு பற்றி எரிவதைக் கண்டு பரிகாசம் செய்த சில முஸ்லிம்களைக் குறித்து இவ்வாறு கூறினார்கள்:

“சில முஸ்லிம்கள் தங்களது மகிழ்ச்சியை வெளியிட்டு சுப்ஹானல்லாஹ் என்று கூறுகின்றனர். நல்லது. இன்று அவர்கள் ஏளனத்துடன் சுப்ஹானல்லாஹ் கூறட்டும். ஆனால் இறைவன் நாடினால் நாம் இதை விட சிறப்பான, அழகான ஒரு கட்டடத்தை விரைவில் கட்டுவோம். மேலும் நாம்தான் உண்மையான முறையில் சுப்ஹானல்லாஹ், மாஷா அல்லாஹ் கூறக் கூடியவர்களாக இருப்போம்.”

இன்று ஹுஸூர் அவர்கள் இந்தப் புதிய வளாகத்தைத் திறந்து வைக்கின்ற பொழுது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் கம்பீரமிக்க இவ்வார்த்தைகள் எந்த அளவுக்கு நிறைவேறி உள்ளன என்பதற்கு நாம் சாட்சி அளிக்கின்றோம். இந்நிகழ்ச்சி குறித்த அறிக்கை பின்வருமாறு:

புதிய பல்நோக்கு வளாகத்தைத் திறந்து வைப்பதற்காக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மாலை சுமார் 5:30 மணியளவில் சர்ரே மார்டன் நகரில் அமைந்துள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் வந்தடைந்தார்கள். வந்தடைந்தவுடன் மரக்கன்று ஒன்றை நட்டினார்கள். பின்னர் பள்ளிவாசலின் பெயர் பலகையைத் திறந்து வைத்தார்கள். புதிய வளாகத்தின் பல்வேறு வசதிகளையும், சிறப்பம்சங்களையும் பார்வை இட்டவாறு சிறிது நேரம் சுற்றிப் பார்த்தார்கள்.

மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகள் தொழவைத்ததன் பின்னர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பல்வேறு விருந்தினர்களைச் சந்தித்தார்கள். அதற்குப் பின்னர் UK-வின் தேசிய அமைதிக் கருத்தரங்கில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காகச் சென்றார்கள். UK-வின் துணை அமீர் முஹம்மது நசீர் கான் சாகிப் அவர்கள், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தொலைநோக்குப் பார்வை எவ்வாறு இறுதியாக நிறைவேறி உள்ளது என்பதை நினைவு கூர்ந்தவர்களாக கூறினார்கள்:

"ஹுஸூர் அவர்கள் புதிய கட்டடத்தைச் சுற்றிப் பார்த்த போது அனைத்துமே பயன்படுத்தத்தக்க வகையில் தயாராக இருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். இது நமக்கு நல்ல விளைவாகும். தீ விபத்து ஏற்பட்டபோது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், 'ஒருநாள் நாம் சுப்ஹானல்லாஹ், மாஷா அல்லாஹ் கூறக் கூடியவர்களாக இருப்போம்' என்று அனைவருக்கும் உறுதிப்பாட்டை வழங்கினார்கள். இன்று இந்தக் கட்டடத்தையும் அதற்குள் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதையும் பார்த்து இங்கு இருக்கின்ற அனைவரும் அவ்வாறே கூறிக் கொண்டிருக்கின்றனர். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், பள்ளி வளாகத்தைத் தூய்மையாகவும் நன்கு பராமரித்தும் வர வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள். மேலும் பல வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளார்கள்."

## தேசிய அமைதிக் கருத்தரங்கு UK 2023

மாலை 7:10 மணியளவில் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹமத் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பைத்துல் புதுஹ் பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள தாஹிர் அரங்கத்தை வந்தடைந்தார்கள். பின்னர் உலகம் நெடுகிலும் 40 நாடுகளிலிருந்து UK-வின் இவ்வருட தேசிய அமைதிக் கருத்தரங்கு மற்றும் பள்ளிவாசலின் புதிய வளாகத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்திருந்த விருந்தினர்களை வரவேற்றார்கள்.

முதலாவது அமர்வு இஹ்ஸான் அஹ்மத் அவர்கள் ஓதிய திருக்குர்ஆனின் அதிகாரம் அஃராஃப், 56-59 வசனங்களுடன் ஆரம்பமானது. அலீம் ஸியா சாஹிப் அவர்கள் அதன் ஆங்கில மொழியாக்கத்தைப் படித்தார்கள். அடுத்ததாக, UK-வின் அமீர் ஜனாப் ரஃபீக் ஹயாத் சாஹிப் விருந்தினர்களை வரவேற்றதுடன், அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய அறிமுகத்தை வழங்கி, பைத்துல் ஃபுதூஹ் பள்ளி வளாகக் கட்டடத்தின் வரலாற்றுப் பிண்ணனியையும் எடுத்துரைத்தார்கள். கொரோனா பரவலின் காரணமாக ஏற்பட்ட சில ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு தேசிய அமைதிக் கருத்தரங்கு மீண்டும் நடத்தப்படுவதாக தெரிவித்தார்கள். இவ்வருட அமைதிக் கருத்தரங்கின் கருப்பொருள் 'உண்மையான அமைதிக்கான அடித்தளம்' என்பதாகும் என்றும் கூறினார்கள்.

பின்னர், UK-வின் தேசிய வெளிவுறவுத்துறை செயலர் ஃபரீத் அஹ்மத் சாஹிப் அவர்கள், UK பிரதமர் ரிஷி சுனக்




அவர்களின் சிறப்பு தூதுச்செய்தியை வாசித்தார்கள். அதைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் மூவர், லிபரல் டிமாக்ரட்ஸ் கட்சியின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான சர் ஏட் டாவி, தொழில்நுட்பத் துறை அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான பால் ஸ்கலி, UK கேபினட் மினிஸ்டர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான ஃப்ளுவர் அன்டர்ஸன் ஆகியோர் சிற்றுரை நிகழ்த்தினர்.

சொற்பொழிவுகளைத் தொடர்ந்து அமைதி முன்னேற்றத்திற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாத்தின் பரிசினை பெறக் கூடியவர்களைக் குறித்த அறிமுகம் செய்யப்பட்டது. அவர்கள் சுவிட்சர்லாந்தைச் சார்ந்த பார்பரா ஹோஃப்மன் மற்றும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த டாடடோஷி ஆக்கிபா ஆகியோர் ஆவர். அவர்கள் இந்நிகழ்விற்கு வந்திருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடமிருந்து பரிசைப் பெற்று கண்ணியப்படுத்தப்பட்டனர். மேலும், அவர்கள் இருவரும் அமைதிக் கருத்தரங்கில் சிற்றுரை ஆற்றினர்.

பின்னர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவதற்காக மேடைக்கு வந்தார்கள்.

இந்த நிகழ்விற்கு வந்திருந்த விருந்தினர்களுக்கு நன்றியைத் தெரிவித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது சொற்பொழிவைத் தொடங்கினார்கள். அமைதிக் கருத்தரங்கை உள்ளடக்கிய இந்த பைத்துல் புதூஹ் பள்ளிவாசல் வளாகத்தின் மறு கட்டமைப்பு திறப்பு விழா நிகழ்ச்சி இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றது என அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே இதன் அடிப்படையில் ஹுஸூர் அவர்கள் பள்ளிவாசல் கட்டுவதன் நோக்கங்களையும் உலகின் தற்போதைய நிலவரத்தையும் குறித்து பேசியதுடன் உலக அமைதி மற்றும் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப் -படுத்துவது என்ற தமது கருத்தையும் குறிப்பிட்டார்கள்.

சக மனித இனத்தவர் மற்றும் இறைவனது படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றாமல் இறைவனின் உரிமைகளை நிறைவேற்றுவது இயலாத ஒன்றாகும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) குறிப்பிட்டார்கள். இஸ்லாத்தின் இவ்விரண்டு பிரதான கோட்பாடுகளின் பக்கம் கவனத்தை ஈர்க்கவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் அனுப்பப்பட்டுள்ளதாக அஹ்மதிய்யா முஸ்லிம்கள் நம்புகின்றனர். இறைவனை வணங்குவதற்கும் சக மனித குலத்தினரின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கும் இடையில் நேரடித் தொடர்பு உள்ளதையும் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டார்கள்.


மேலும் அவர்கள் கூறினார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ்வை வணங்குவதற்காகவே பள்ளிவாயில்கள் கட்டப்படுகின்றன. மற்றவர்களின் உரிமைகளைச் செலுத்த தவறியவர்களின் இறை வணக்கங்கள், அவர்களின் இரட்சிப்பிற்குரிய வழியாக அமைவதற்குப் பதிலாக அவர்களது வீழ்ச்சிக்கும் ஏளனத்திற்கும் காரணமாக அமைந்து விடும். கஅபாவை நோக்கி முகம் திருப்பியவர்களாக தொழுமாறு முஸ்லிம்கள் கட்டளை இடப்பட்டுள்ளனர். புனித கஅபா ஆலயம் கட்டப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதும் எப்பொழுதும் சரிசம முக்கியமானதாக இருக்கினறது. அது குறித்து திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதாவது,

அதில் (அல்லாஹ்வின் புனித ஆலயத்தில்) நுழைபவர் அமைதி பெற்றவராகி விடுகின்றார். (3:98)

தங்களுக்கு அமைதியைத் தேடவும், மற்றவர்களின் அமைதிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும் திகழ வேண்டுமென இவ்வசனம் தொழுகையாளிகளின் கவனத்தை ஈர்க்கின்றது. ஏனென்றால், புனித கஅபாவின் பிம்பமாக பள்ளிவாயில்கள் இருக்கின்றன. மேலும், தினந்தோறும் ஒவ்வொரு தொழுகையின் போதும், முஸ்லிம்கள் ஃபாத்திஹா என்ற அதிகாரத்தை ஓதுகின்றனர். அவ்வதிகாரம் இறைவன், முஸ்லிம்களை மட்டுமல்ல; அனைத்து உலகங்கள் மற்றும் அனைத்து மக்களை படைத்தவன் என இயம்புகிறது.

(தொடரும்...)





# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

**17**

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை


தவறான நோக்கத்துடன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கடிதத்தின் மொழிபெயர்ப்பை இங்கே தர விரும்புகிறேன். அந்தக் கடிதத்தைப் படிக்கும் எந்த அறிவுள்ள மனிதனும் இதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெட்கப்படுவதற்கு எதுவுமில்லை என்பதை ஒப்புக் கொள்வார். அன்னாருக்கு இறைவன் மீதிருந்த நம்பிக்கைக்கும் உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக அது அமைந்திருந்தது. மிர்ஸா அஹ்மது பேக்கை சகோதர வாஞ்சையோடு விளித்து பின்வருமாறு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:

"நான் உங்களுக்கு ஏற்கெனவே அளித்த ஒரு வாக்குறுதியின்படி, எனக்கு விண்ணிலிருந்து கிடைத்த ஒரு கட்டளையை உங்கள் முன் வைக்க நாடுகின்றேன். நீங்கள் இதனை எந்த தப்பெண்ணமும் கொள்ளாமல் கவனத்தோடு படிப்பீர்கள் என்று நம்புகின்றேன். 1886–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ஆம் நாள் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்த படி, (அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) நீங்கள் என்னோடு ஒரு புதிய உறவை ஏற்படுத்திக் கொண்டால், உங்கள் மீது எல்லா விதமான நன்மையும், கருணையும் காட்ட வேண்டும் எனத் தெளிவான வசனங்களில் நான் கட்டளையிடப் –பட்டுள்ளேன். இதனை மேலும் விபரமாகக் கூறுகின்றேன்.

எனது தில்லி திருமணத்திற்குப் பிறகு நான் என்னோடு அருளுக்குரிய பெண்ணைத் திருமணம் செய்வேன் என்றும், அவர் மூலம் எனக்குக் குழந்தைகள் பிறக்கும் என்றும், அக்குழந்தைகள் செழிப்போடும் அருளோடும் விளங்குவார்கள் என்றும் இறைவன் தனது தூய வார்த்தைகள் மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றான். இந்த முன்னறிவிப்பு 1886–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ஆம் நாள் ஹோஷ்யார்பூரிலிருந்து வெளியிடப்பட்ட பிரசுரத்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின் மீண்டும் மீண்டும் வந்த இறையறிவிப்புகளால் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எங்கே, எந்த இனத்தில் இந்தத் திருமணம் நடைபெறும் என்பது இந்தக் கணம் வரை எனக்குத் தெரியாது. இப்போது சில நாட்களாக உங்கள் விஷயமாக நான் சிந்தித்தபோது நீங்கள் அந்த அன்புக்கும், கருணைக்கும் தகுதியானவர் என எனக்குத் தெளிவாக இறையறிவிப்புகள் கிடைத்துள்ளன. உங்கள் மீது அன்பையும், கருணையையும் காட்ட வேண்டும் என்று மட்டும் இறைவன் நாடவில்லை. இந்தப் புதிய உறவின் மூலம் முறிந்துபோன பழைய உறவுகளை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் எனவும், அவன் விரும்புகிறான்.

எனவே இந்த இறை கட்டளை நம்பிக்கை ஊட்டுவதோடு கவனக் குறைவாகச் செயல்படும் பட்சத்தில் அச்சப்படுவதற்கான அம்சத்தையும் கொண்டிருக்கிறது. இந்தத் திருமணம் நடைபெறவில்லையென்றால், அவரை வேறொருவருக்குத்



திருமணம் செய்து வைப்பது உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செயலாக அமையாது. அதன் முடிவு, துன்பமும், துயரமும், மரணமுமாக இருக்கும். இப்போதைக்கு இந்த அளவுக்குச் சுருக்கமாக மட்டும் கூறியிருக்கிறேன். மேலும் விபரங்களை வெளியிடுவதற்கு முன், இந்த வேண்டுகோளை மறுக்கவோ, நிராகரிக்கவோ வேண்டாம் என மிகுந்த பரிவோடும், உண்மையாகவும் கேட்டுக் கொள்கிறேன். இறைவன் எனக்கு எல்லாவற்றையும் வழங்கி இருக்கிறான்; அதில் குறையேதும் வைக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நம்முடைய சிறிய குடும்பத்தில் ஒற்றுமைக்குலைவும், பிரிவினையும் காணப்படுவ –தாலும் முறிந்துபோன இதழ்களை ஒரே நூலில் ஒன்று சேர்க்க இறைவன் விரும்புகிறான். உங்களையே அது தொடர்பாகத் தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளான். எனவே முற்றிலும் இறை விருப்பத்திற்குக் கட்டுப்பட்டே இந்த விருப்பத்தை வெளியிடுகிறேன். உங்கள் மூத்த மகளை எனக்குத் திருமணம் செய்து தரும்படி மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொண்டு என் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பீர்கள் என நம்புகிறேன்.

இந்தத் திருமணத்தின் மூலம் எல்லா விதமான தீமைகளையும் இறைவன் அகற்றித் தருவான். எல்லா விதமான பேரபாயங்களிலிருந்தும் அவன் உங்களைக் காத்தருள்வான். உங்கள் மீது தன் அருளைப் பொழிவான். என்னைப் பற்றி உங்களுக்கு முழுமையாகத் தெரியாது. ஆனால் இந்த உறவு பலவிதமான அருட்களுக்கு ஆரம்பமாக அமையும். நீங்கள் ஒரு புதிய உலகில் நுழைவீர்கள். இந்தத் திருமணம் உங்கள் மகளை ஓர் அரியணையில் அமர வைப்பதற்கு ஒப்பாக அமையும். அவரை ஒரு தெய்வீக வாழ்க்கையில் நுழையச் செய்வதாக அமையும். இந்தத் திருமணம் நடைபெற்றால், நீங்கள் வேறெங்கும் கண்டிராத அளவுக்கு என்னை உங்கள் நலம் நாடுபவனாகக் காண்பீர்கள்.

நான் ஒரு கருமி அல்லன் என்றும் உங்கள் மீது அன்பு கொண்டவன் என்பதையும், உங்களுக்கு நன்மை செய்யக் காத்திருக்கிறேன் என்பதையும் காட்டுவதற்காக எனது நிலம், பிற சொத்துகள் ஆகிய மொத்த சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை உடனடியாக உங்கள் மகளுக்கு அன்பளிப்பாகத் தர ஆயத்தமாக இருக்கிறேன். (இதை நீங்கள் விரும்பும் நேரத்தில் நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன்.)

என்னுடைய உறவினர்கள் கண்டுணரத்தக்க விதத்தில் தெளிவான ஓர் அடையாளத்தைக் காட்டுமாறு நான் எப்போதும் இறைவனிடம் துஆ செய்து வந்துள்ளேன். எனவே, அவன் இந்த நோக்கத்திற்கான அடையாளத்தைத் தந்திருக்கிறான் என்பதை நான் அறிவேன். அதன் இரு பக்கமும் எப்படி அமைந்திருக்கிறது என்றால், இதைப் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் எனது உண்மைத் தன்மையையும், பொய்மையையும் கண்டு கொள்ள முடியும்.

இந்தத் திருமணம் உங்களுக்கு அருளுக்குரியதாக அமைவதைப் போன்று அதன் அருட்கள் நமது உற்றார் உறவினர் அனைவரின் வீடுகளுக்கும் பரவும். நம்மிடையே ஒரு புதிய அன்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் அது நமது வீடுகளில் பரவி வரும்; மார்க்கத்திற்கு எதிரான போக்கு மறைந்து விடும் என நாம் நம்பலாம். இக்காலத்தில் நமது சகோதரர்களாக ஆண்களும், பெண்களும் முற்றிலும் இஸ்லாத்தைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். இறைவன் ஹராம் (தடுக்கப்பட்டவை) என்று அறிவித்துள்ளதை அவர்கள் ஹலால் (ஆகுமானவை) ஆகக் கருதுகின்றனர். ஆகுமான காரியங்கள் அவர்களைப் பொருத்தவரை தடுக்கப்பட்டவற்றை விட மோசமானதாகத்




தோற்றமளிக்கின்றன. அவர்களுடைய சமுதாய அந்தஸ்தின் மீது அவர்கள் காட்டும் அக்கறைகள் அவர்களுடைய நபியாக விளங்குகிறது. மக்களின் அங்கீகாரம்தான் அவர்களின் மார்க்கச் சட்டமாக விளங்குகிறது. இறைவனும் அவனது தூதரும் வழங்கிய கட்டளைகளுக்குக் கட்டுப்படுவதை விட நரக நெருப்பில் எரிபடுவதை அவர்கள் மேலானதாகக் கருதுகின்றனர். அவர்கள் மார்க்கத்தின் எதிரிகளாகவும், நம்பிக்கையின் மையைக் கைகொண்டவர்களாகவும் ஆகி விட்டனர். எனவே வல்லமை மிக்க இறைவன் அவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் உணரும் பொருட்டு தனது ஆற்றலின் ஒளியை அவர்களுக்குக் காட்ட நாடுகிறான்.

நான் அறிந்த வரை இந்த விஷயத்தின் ஒவ்வோர் அம்சமும் வானத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்ப்பது இறை கோபத்தைச் சம்பாதிக்கும். எனவே இந்தத் திருமணத்தின் மூலம் எந்தக் கஷ்டமும் வராமல் நான் பார்த்துக் கொள்வேன். இந்த நோக்கத்திற்காகவே ஒரு தனி வீட்டைக் கட்ட நான் ஏற்பாடு செய்வேன். நான் எனது கடமைகளை மிகச் சிறந்த முறையில்

நிறைவேற்றுவேன். இந்தத் திருமணத்தை ஒரு நற்பேறாக நீங்கள் கருதுவீர்கள். நமது குடும்பம் முழுவதும் ஒரே இடத்தில் வாழும். நீண்ட காலமாகப் பிரிந்திருந்த அனைவரையும் ஓரிடத்தில் இறைவன் ஒன்று சேர்ப்பான். நான் எந்த விதத்திலும் எந்தக் குறைபாட்டையும் வைக்க மாட்டேன். இறைவன் தன் அருள் மழையைப் பொழிவான்.

இறைவன் அருளிய அனைத்து விஷயங்களையும் அப்படியே உங்கள் முன் வைத்து விட்டேன். இந்த மகிழ்ச்சிக்குரிய ஏற்பாட்டை அவன் உங்களை ஏற்றுக் கொள்ளச் செய்வானாக என துஆ செய்கிறேன். ஏனென்றால் அனைத்தும் அவன் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. ஒன்று நடக்க வேண்டும் என அவன் விரும்பினால் உள்ளங்களை அதனைப் புரிந்து கொள்ளச் செய்கின்றான். இல்லாவிட்டால் ஒரு நொடிப்பொழுதில் உள்ளங்கள் கோணலாகி விடுகின்றன.

நான் முழு உலகிற்கும் சவால் விடுத்திருக்கின்றேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். எனக்கு இறைவெளிப்பாடுகள் வருகின்றன என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் முப்பதாயிரம் பிரசுரங்கள் வரை வெளியிட்டிருக்கிறேன். எல்லா நாடுகளுக்கும் 500 பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பியிருக்கிறேன். இருந்த போதிலும் எனது சகோதரர்கள் முற்றிலும் என்னைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களின் துரதிஷ்டவசத்தின் காரணமாக அவர்கள் என்னை ஒரு மோசடிக்காரன் என்றும், தந்திரபுத்தி கொண்டவன் என்றும் கருதுகின்றனர். இறைவன் என்னுடைய பணிகளைப் பற்றி அவர்களுக்கும் அறிவிக்க நாடுகின்றான்.

நான் இந்தக் கடிதம் முழுவதையும் நெஞ்சம் நெகிழ்ந்த கருணையோடு எழுதி இருக்கிறேன். நான் உங்களின் உண்மையான நலம் நாடுபவனாவேன். இதில் ஏதேனும் கடினமான வார்த்தைகள் இருந்தால் என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் நான் மேலான இறைவனின் தூதுவனும், உங்களின் உண்மையான நண்பனும் ஆவேன்.

வஸ்ஸலாம்.

குலாம் அஹ்மது
காதியான்

பின்குறிப்பு:

இந்தக் கடிதத்தில் உள்ள விஷயங்களை அன்னியர்களிடம் தெரிவிப்பதைத் தவிர்க்கவும். இதனை நீங்கள் தனியாகப் படித்து, அதிலுள்ள விஷயங்களை அலசி ஆராய்ந்த பின் எனக்குத் தகவல் தெரிவிக்கவும். இந்த இரகசியம் இங்கு யாருக்கும் தெரியாது. ஏனென்றால் இது போன்ற விஷயங்களை ஆரம்ப கட்டத்திலேயே விபரம் தெரியாதவர்களுக்கும், பாமர மக்களுக்கும் காரணமின்றித் தெரிவிப்பது சரியாக இருக்காது. இந்தக் கடிதம் ஆனந்தத்தை அள்ளி வருகின்ற ஒன்றாகும். இறையறிவிப்பு, மறைவானவற்றை அறியும் இறைவன் மட்டுமே அறிந்த பல மறைவான விஷயங்களின் அடிப்படையில் இக்கடிதம் எழுதப்படுகிறது. எனவே இதனை மிகுந்த கண்ணியத்தோடு ஒரு பெட்டியில் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையும், அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றும் ஆகும். நான் இந்த இறை கட்டளையைத் தெரிவித்து விட்டேன் என்று திருப்தி கொள்ளும் பொருட்டே இதனை நான் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்திருக்கிறேன். நேர்வழியைப் பின்பற்றுவோருக்கு சாந்தி உண்டாவதாக. (நூர் அஃப்ஷான்)

(தொடரும்...)

## எகிப்திய மன்னன் ஃபிர்அவ்னும், ஹைக்சோஸும்

ஃபிர்அவ்ன் மூஸா நபியின் காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னன் ஆவான். நபிமார்களின் எதிரிகளின் பெயர் சொல்லிக் கூறப்பட்டவர்களுள் ஃபிர்அவ்னும் ஒருவன். இவனைப் பற்றித் திருக்குர்ஆன் 74 இடங்களில் ஃபிர்அவ்ன் என்று பெயரைக் கூறுகிறது. ஏறக்குறைய 27 சூராக்களில் இவன் பெயர் இடம் பெற்றுள்ளது.

ஆனால் அதே சமயம் யூஸுஃப் நபி காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னன், மன்னன் என்றே 6 இடங்களில் கூறப்படுகிறான். பெயர் கூறப்படவில்லை.

மூஸா நபி பால்குடி பருவத்தில் நைல் நதியில் மிதந்து வந்து பேழையிலிருந்து எடுத்து வளர்த்து ஆளாக்கியவன் ஃபிர்அவ்ன் ஆவான். மூஸா நபியும் ஹாரூன் நபியும் இஸ்ரவேல் மக்களை விடுதலை செய்யும்படி வேண்டிய ஃபிர்அவ்ன், முன்னவனின் மகன் ஆவான். இவ்வாறு மூஸா நபி தந்தை, மகன் ஆகிய இரு ஃபிர்அவ்ன்களைச் சந்தித்துள்ளார்.

யூஸுஃப் நபி காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னன் ஃபிர்அவ்ன் அல்லன். எகிப்தைப் படையெடுத்து வென்று அதன் ஒரு பகுதியை ஆட்சி செய்தவன் ஹைக்சோஸ் எனும் பெயரைக் கொண்ட மன்னன் ஆவான். இவன் மூஸா நபிக்கு பல நூற்றாண்டுக்கு முன்னர் வந்த யூஸுஃப் நபி காலத்தில் எகிப்தை ஆட்சி செய்தவன் ஆவான். திருக்குர்ஆன் எகிப்தை ஆண்ட இரு வேறு மன்னர்களையும் பிரித்துக் காட்டுகிறது. பைபிளோ இரு மன்னர்களையும் பாரோ என்றுதான் தவறாக அழைக்கிறது.

"யூஸுஃப் நபி எகிப்துக்கு வந்தபோது ஹைக்சோஸ் அரசவம்சத்து மன்னர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தனர். அரபு இனத்தைச் சேர்ந்த அவர்கள் எகிப்து அரியணையை அபகரித்து கி.மு. 2000 முதல் கி.மு. 15 நூற்றாண்டு வரை எகிப்தை ஆண்டனர். அந்நிய ஆட்சிக்கு எதிராக வெடித்த உள்நாட்டுக் கிளர்ச்சியால் ஹைக்சோஸ் (Hyksos) அரசவம்சம் முடிவுக்கு வந்தது.

பின்னர் எகிப்திய சுயாட்சி நிறுவப்பட்டது. ஆட்சிதனையைக் கையகப்படுத்திக் கொண்ட குலம் ஃபாரோ என்ற பெயரைத் தங்களுக்கு எனத் தேர்வு செய்து கொண்டது." (ஆதாரம்: நூல் 'இறைவன் இருக்கிறான்' ஆசிரியர் வஹீதுத்தீன் கான் பக்கம் 187–188)

இந்த ஹைக்சோஸ் எனும் பெயரை, திருக்குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 12:43–வது வசனத்தின் அடிக்குறிப்பில் ஆதம் எசபாயும் டாக்டர் முஸ்தஃபா கத்தாபும் கூறியுள்ளனர்.

*(தொடர்ச்சி 19-ஆம் பக்கம்...)*

# சந்ததிகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும்

★★★ டாக்டர் மன்சூரா அலாவுதீன் சாஹிபா ★★★

சொற்பொழிவு, காதியான் ஆண்டு மாநாடு - 2022

தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது

وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

பொருள்: மேலும் அவர்கள் எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு இமாமாக (தலைவராக) ஆக்குவாயாக! என்று வேண்டுவார்கள். (25:75)

உண்மையாளர்கள் உங்களின் மடியிலிருந்து
வளர்ந்து புறப்படட்டுமாக!

அவர்களின் கரங்களின் மூலமாக மார்க்கத்திற்கு
உதவி கிடைக்கட்டுமாக!

இவ்வாறு, உங்களின் வீடுகளிலுள்ள விளக்குகளுக்கு
ஒளி கிடைக்கட்டுமாக!

அவர்களின் மூலமாக உலகிற்கு
நேர்வழி கிடைக்கட்டுமாக!

மதிப்பிற்குரிய தலைவி அவர்களே! அன்பிற்குரிய சகோதரிகளே! சிறுமிகளே! எனது சொற்பொழிவின் தலைப்பு, இறை நேசம், தொழுகை, திலாவத், கிலா∴பத்துடன் நேசம், மேலான நல்லொழுக்கங்கள் ஆகியவற்றின் ஒளியில் சந்ததிகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும் என்பதாகும்.

எந்த திருக்குர்ஆன் வசனம் ஓத நீங்கள் கேட்டீர்களோ அதன் மொழியாக்கம் என்னவென்றால், "எங்கள் இறைவா! எங்கள் வாழ்க்கைத் துணைகள் மற்றும் எங்கள் சந்ததிகள் மூலமாக எங்களுடைய கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவாயாக! இறையச்சம் கொண்டவர்களுக்கு எங்களை இமாமாக ஆக்குவாயாக!"

அன்பிற்குரிய சகோதரிகளே! இக்காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொண்டு, அன்னார் மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை வழங்கியதற்காக நாம் அல்லாஹ்வுக்கு எந்த அளவு நன்றி கூறினாலும் அது குறைவே! இன்றிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நாலாபுறமும் இருண்டகாலம் சூழ்ந்திருந்தபோது, இஸ்லாத்தின் கப்பல் சுழலில் சிக்கிதத்தளித்துக் கொண்டிருந்தபோது, அந்நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் உலகிற்கு அனுப்பி வைத்தான். அன்னார், அல்லாஹ்வின் உதவியுடன் வேகமாகவும் கடினமாகவும் வீசக்கூடிய எதிர்ப்பின் புயல்களை எதிர்கொண்டவாறு இஸ்லாத்தின் கப்பலை மூழ்குவதில் இருந்து காப்பாற்றினார்கள். மேலும், இறைவனுடைய மார்க்கத்திற்காக தமது செல்வம், கண்ணியம் மற்றும் சந்ததிகள் ஆகியவற்றை தியாகம் செய்யக்கூடிய எவ்வாறான ஒரு ஜமாஅத்தை நிறுவினார்கள் என்றால் அதைக் குறித்து, இஸ்லாத்தின் தொண்டுக்காக முழு மூச்சாக உழைக்கின்ற ஒரு ஜமாஅத்



இந்த காலகட்டத்தில் உள்ளது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் ஆகும் என்று இன்று எதிரிகளும் கூட ஒப்புக் கொள்கின்றனர்.

அன்பிற்குரிய சகோதரிகளே! இந்த ஜமாஅத்தில் ஓர் உறுப்பினராக இருக்கக்கூடிய நற்பேறு நமக்குக் கிடைத்துள்ளது. அது நம் மீது சில பொறுப்புகளையும் சுமத்துகிறது. அந்த பொறுப்புகளின் பக்கம் நான் எனது சகோதரிகளுக்கு கவனமூட்ட விரும்புகின்றேன்.

ஏதேனும் ஒரு சமுதாயம் முன்னேற்றம் கண்டு உச்சம் அடைகிறது என்றால் அதில் அடங்கியுள்ள இரகசியம், பெண்களின் அறிவு, துணிவு, மேலான செயல்பாடுகள் ஆகியவையே ஆகும். அவ்வாறே, ஏதேனும் ஒரு சமுதாயத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தேடுவோம் என்றால் அதிலும் கூட நமக்கு பெண்களுடைய கைகள்தான் தென்படுகின்றன. இது ஓர் உண்மையாகும். உலக வரலாறு இதற்கு சாட்சியாக உள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த உண்மையைக் கருத்தில் கொண்டவாறு தான் மார்க்கம் மற்றும் கல்வி ஆகியவற்றில் ஜமாஅத்தில் உள்ள பெண்களின் முன்னேற்றத்திற்காக லஜ்னா இமாயில்லாஹ்வை நிறுவினார்கள். அன்னாருடைய உள்ளத்தில் பெண்களின் தர்பிய்யத்திற்காக எல்லையில்லா துடிப்பு காணப்பட்டது. ஜமாஅத்திலுள்ள பெண்களின் சீர்திருத்தம் ஏற்படாதவரை ஜமாஅத் முன்னேற முடியாது என்பதை அன்னாருடைய தொலைநோக்குப் பார்வை கண்டு விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பெண்கள் மீது உள்ள உண்மையான பொறுப்பு, குழந்தைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத் ஆகும். இந்த பொறுப்பு ஜிஹாதுடைய பொறுப்பை விட எவ்விதத்திலும் குறைந்தது கிடையாது. குழந்தைகளின் தர்பிய்யத் நல்ல விதமாக அமைந்து விட்டால் சமுதாயத்தின் அடித்தளம் உறுதியாகி விடுகிறது சமுதாயம் முன்னேற்றம் அடைந்து விடுகிறது. பிள்ளைகளின் தர்பிய்யத் நல்ல விதமாக அமையவில்லை என்றால், கண்டிப்பாக ஏதேனும் ஒருநாள் சமுதாயம் அழிந்து விடும். ஆகவே எந்த ஒரு சமுதாயத்தின்




முன்னேற்றமாக இருந்தாலும் சரி! அழிவாக இருந்தாலும் சரி! அது அந்த சமுதாயத்தின் பெண்களையே சார்ந்துள்ளது. சஹாபியாத் எவ்வாறு தர்பிய்யத் வழங்கினார்களோ அதே போன்று தற்காலத்தில் உள்ள தாய்மார்கள் தம்முடைய சந்ததிகளுக்குத் தர்பிய்யத் வழங்கினால், சஹாபியாத்தின் சந்ததிகள் சமுதாயத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடிய வீரர்களாக எவ்வாறு ஆனார்களோ அவ்வாறே இந்தத் தாய்மார்களின் சந்ததிகளும் ஆவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இன்றும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஏதேனும் சீர்கேடு ஏற்படுகிறது என்றால் (அல்லாஹ் அதிலிருந்து காப்பானாக!) அதற்கு பெண்களே பொறுப்பு ஆவார்கள்." (அல் இஸ்ஹார் பக்கம் 327)

சந்ததிகளின் தர்பிய்யத்தில் அனைத்தையும் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயம், பெற்றோர்களின் துஆக்களாகும். (குழந்தை) பிறப்பிற்கு முன்பிருந்து அவர்கள் உயிர் வாழும் வரை அவர்களுக்காக துஆக்களை செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். பிறப்பிற்கு முன்பு நல்ல ஸாலிஹான சந்ததி கிடைப்பதற்காக,

رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۚ اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ

என்ற இந்த துஆவை அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். அதாவது, என் இறைவா! உன் சார்பாக எனக்கு நல்ல, தூய சந்ததியை வழங்குவாயாக! நிச்சயமாக நீயே துஆக்களைக் கேட்பவனாவாய்! (3:39)

இதன் பிறகு சந்ததிகளை, நல்லவர்களாகவும் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியர்வர்களாக ஆக்கு-வதற்காகவும் அல்லாஹ் துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளன்.

وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّ اجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும், எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு இமாமாக ஆக்குவாயாக! (25:75)

ஆகவே தாய்மார்களின் முதன்மையான கடமை என்னவென்றால், அவர்கள் தங்களுடைய முழு ஆற்றலையும் துஆக்களில் ஈடுபடுத்தி விட வேண்டும். அல்லாஹ்வே! நீ எனக்கு வழங்கிய சந்ததியை சரியான முறையில் வளர்க்கக் கூடிய ஆற்றலும், சரியான முறையில் தர்பிய்யத் கொடுக்கக் கூடிய ஆற்றலும் எங்களிடம் கிடையாது. அவர்கள் உனது மார்க்கத்தில் தம்மை அர்ப்பணிக்கக் கூடியவர்களாக ஆகும் வகையில் நாங்கள் அவர்களுக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் கொடுக்கக் கூடிய நல்வாய்ப்பை நீ எங்களுக்கு வழங்குவாயாக! மேலும், இந்த சந்ததிகள் எங்களுக்காகவும் கண்களுக்குக் குளிர்ச்சி தரக் கூடியவர்களாக ஆவார்களாக. உனது விருப்பத்தையும் பெறக்கூடியவர்களாக ஆவார்களாக என்ற துஆவை குழந்தை பிறப்பிற்கு முன்பே தம்முடைய அன்றாட பிரார்த்தனையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக துஆக்களில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி-யுள்ளார்கள். குழந்தைகளுக்கு உடல் ரீதியாக தண்டனை கொடுப்பதையோ, அதிகமாக அதட்டிப் பேசுவதையோ அன்னார் விரும்பாதவராக இருந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்காக துஆ செய்து வருவதைத் தமது வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அடிக்கடி இதைக் கூறி வந்திருக்கிறார்கள். அன்னாருடைய செயல் முன்மாதிரி வாழ்வு நம் முன்னால் இருக்கின்றது. அன்னார் தம் சந்ததிகளுக்காக துஆ செய்தவாறு தம் கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

(இறைவா!) நற்பேறு பெற்றவர்களாக இவர்களை
ஆக்குவாயாக! மார்க்கத்தையும் செல்வத்தையும்
இவர்களுக்கு வழங்குவாயாக!

நீயே இவர்களைப் பாதுகாப்பாயாக!
இவர்களின் மீது உனது அருள் உண்டாகட்டுமாக!

வழிகாட்டலையும், நேர்வழியையும், நீண்ட வாழ்வையும்,
கண்ணியத்தையும் இவர்களுக்கு வழங்குவாயாக!

இந்த நாளை அருளுக்குரிய நாளாக ஆக்குவாயாக!
என்னை காண்கின்ற இறைவன் தூயவன் ஆவான்.

ஷெய்த்தானிடமிருந்து (இவர்களை) விலக்கி
வைப்பாயாக! உனக்கு அருகில் (இவர்களை)
வைப்பாயாக!

ஒளியால் (இவர்களின்) உயிரை நிரப்பி வைப்பாயாக!
மகிழ்ச்சியால் (இவர்களின்) உள்ளத்தை நிரப்பி
வைப்பாயாக!

அவர்களுக்காக நான் உன் முன் அர்ப்பணம்
ஆகின்றேன். (அவர்கள் மீது) அவசியம் அருளை
வைப்பாயாக!

இந்த நாளை அருளுக்குரிய நாளாகஆக்குவாயாக!
என்னை காண்கின்ற இறைவன் தூயவன் ஆவான்!"

துஆக்களுடன் நல்ல விஷயங்களின் பக்கமும் குழந்தைகளுக்கு வழிகாட்டி, அறிவுரை செய்வது மட்டுமின்றி அத்துடன் தமது செயல் முன்மாதிரியைக் காட்டுவதும் மிகவும் அவசியமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

اَكْرِمُوْا اَوْلَادَكُمْ கண்ணியமளிக்கக்கூடிய தன்மை உருவாகும் வகையில் தமது சந்ததிகளுக்கு கண்ணியம் கொடுங்கள் என்று கூறியிருப்பதிலும் அதே தத்துவம்தான் எடுத்துரைக்கப்-பட்டுள்ளது. நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு கண்ணியமளித்தவாறு அன்புடன் அவர்களுக்கு நல்ல விஷயங்களின் பக்கம் ஊக்கமளிப்போம் என்றால் அவர்களும் நம்மை தமது உண்மையான நலம் விரும்பியாக கருதுவார்கள். மேலும், பெற்றோர்களுக்குக் கட்டுப்படுவார்கள்.

ஹஸ்ரத் உம்முல் மு.ஃமினீன் (ரலி) அவர்கள் தம் பிள்ளைகளுக்கு எவ்வகையில் தர்பிய்யத் வழங்கினார்கள் என்பதைக் குறித்து ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "பிள்ளைகளின் மீது எப்பொழுதும் நம்பிக்கை கொண்டு, உறுதியான நம்பகத் தன்மையை வெளிப்படுத்தியவாறு அவர்கள் மீது பெற்றோர்களின் நம்பிக்கை வீணாகி விடக் கூடாது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவது ஹஸ்ரத் உம்முல் மு.ஃமினீன் (ரலி) அவர்களுடைய மிகப்பெரும் அடிப்படையான தர்பிய்யத் ஆக இருந்தது. ஆகவே, பிள்ளைகளின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவர்களை சந்தேகத்தோடு பார்க்காதீர்கள்! பொய்யை வெறுத்தல், தன்மானம், போதுமென்ற மனம் ஆகியவை ஹஸ்ரத் உம்முல் மு.ஃமினீன் (ரலி) அவர்களின் முதன்மையான பாடங்களாக இருக்கும். பேச்சைக் கேட்கக் கூடிய பழக்கத்தை பிள்ளைகளிடம் உருவாக்கி விடுங்கள். பிறகு, குழந்தைப் பருவத்தில் உருவாகக்கூடிய குறும்புகள் ஏற்பட்டாலும் சரி! எவ்வித அச்சமும் கிடையாது. எந்த நேரத்தில் தடுத்து நிறுத்தினாலும் (பிள்ளை) விலகிக் கொண்டு விடுவான் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும் என்று எங்களிடத்திலும் கூட அவர்கள் (இதை) எப்பொழுதும் கூறி வந்துள்ளார்கள். ஒருமுறை பேச்சைக் கேட்கக் கூடிய பழக்கத்தை நீங்கள் உருவாக்கி விட்டால், பிறகு எப்பொழுதும் சீர்திருத்தத்திற்கான நம்பிக்கை இருக்கும் என்று கூறுவார்கள். இதைத்தான் அவர்கள் எங்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். பெற்றோர்கள் இல்லாமல் இருக்கும் போதும் கூட நாங்கள் அவர்களின் விருப்பத்திற்கு எதிராக ஏதேனும் செய்து விடுவோமோ என்ற சிந்தனை கூட எங்களுக்கு வரவில்லை."

என்னுடைய குழந்தைகள் பொய் பேசமாட்டார்கள் என்று ஹஸ்ரத் உம்முல் மு.ஃமினீன் (ரலி) அவர்கள் எப்பொழுதும் கூறி வந்துள்ளார்கள். இந்த நம்பிக்கைதான் எங்களைப் பொய்யிலிருந்து காப்பாற்றியது. இன்னும் கூறுவதாயின், (பொய்யை) அதிகம் வெறுக்கச் செய்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவவூது (ரலி) அவர்களுக்கு ஜமாஅத்தின் பெண்கள் மற்றும் சிறுமிகளின் தர்பிய்யத்தில் எந்த அளவுக்கு அக்கறை இருந்தது என்றால், பெண்களிடையே இது தொடர்பாக எண்ணற்ற சொற்பொழிவுகளை அன்னார் நிகழ்த்தியுள்ளார்கள். அவை நமக்கு வழிகாட்டும் சுடராக உள்ளன. அவற்றை மீண்டும் மீண்டும் படித்து, செயலாற்றுவது நம் மீது கடமையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "தாய்மார்கள் மூலமாகவே சமுதாயத்தில் சொர்க்கம் வருகிறது. ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள், தாயின் காலடியில் சொர்க்கம் உள்ளது என்று கூறியுள்ளார்கள். இது எத்துனை நுட்பமான சொற்றொடர் ஆகும்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாய்க்கு எந்த அளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள்! தாய்க்குக் கட்டுப்படுவது, கீழ்படிவது ஆகியவற்றால் சொர்க்கம் கிடைக்கிறது என்று பொதுவாக மக்கள் இதற்குப் பொருள் கொடுக்கின்றனர். இதுவும் சரியானதாகும்! ஆனால் இதனுடைய உண்மையான பொருள் என்னவென்றால், தாய்மார்கள் நல்லவர்களாக இருக்கும் போது, சந்ததிகளுக்கு நல்ல தர்பிய்யத்தை வழங்கக் கூடியவர்களாக இருக்கும் போதுதான் உண்மையான முறையில் சமுதாயத்தில் சொர்க்கம் வரும். தாய்மார்கள் நல்லவர்களாக இல்லைஎன்றால், சந்ததிகள் ஒருபோதும் நல்லவர்களாக ஆக முடியாது! எந்தச் சமுதாயத்தின் சந்ததிகள் நல்லவர்களாக இல்லையோ அந்தச் சமுதாயத்தில் சொர்க்கமும் வர முடியாது."

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: "ஆகவே, எப்பொழுதும் அக்கறையுடன் சந்ததிகளுக்குத் தர்பிய்யத் வழங்க வேண்டும் அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். பெண்கள் தம் வீடுகளில் நேரத்தை செலவழிக்க வேண்டும். பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கான வயது இருக்கும் வரை கட்டாய சூழ்நிலையின்றி வேலைகளுக்குச் செல்வது அவசியம் கிடையாது. அப்படியே வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் பிறகு செல்லட்டும். சில தாய்மார்கள் Professional ஆக பணியாற்றக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தம் பிள்ளைகளுக்காகத் தியாகங்களைச் செய்கின்றனர். டாக்டர்களாக இருக்கின்றனர், நன்கு படித்துள்ளனர். ஆனால் பிள்ளைகளுக்காக வீடுகளில் இருக்கிறார்கள். குழந்தைகள், தம் அவசர தேவைக்குத் தாயாரின் தேவையை உணராத வயதை அடையும் போது, அவர்களுக்கு நன்கு தர்பிய்யத் ஏற்பட்டு விடும் போது (தாய்மார்களாகிய) அவர்கள் வேலைக்கும் செல்கின்றனர். ஆகவே எவ்வாறிருப்பினும், அதற்காக பெண்கள் தியாகங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும். பெண்களின் கால்களின் கீழே சொர்க்கம் உள்ளது என்று அல்லாஹ் பெண்களுக்கு கண்ணியம் வழங்கி இருக்கின்றான். அது ஏனென்றால், அவர்கள் தியாகங்களைச் செய்கின்றனர். தியாகங்கள் செய்யக்கூடிய அடிப்படை தன்மை பெண்களிடத்தில் அதிகமாக இருக்கின்றது. எந்தப் பெண்கள் தம் விருப்பங்களைத் தியாகம் செய்கின்றார்களோ அவர்களின் கால்களின் கீழே சொர்க்கம் உள்ளது."




(அல்.ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 15 மே 2015)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்ய-தஹுல்லாஹ்...) அவர்கள் 2004-ஆம் ஆண்டில் நைஜீரியாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின்போது தம் சொற்பொழிவில் அஹ்மதி பெண்களிடம் கூறினார்கள்: "இஸ்லாமிய சமூகத்தில் பெண்களுக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து உள்ளது என்பதை அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர்கள் தம்முடைய இந்த உயர்ந்த அந்தஸ்தை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றால், அவர்களின் வருங்காலத் தலைமுறையினர் நம்பிக்கையில் நிலைத்திருப்பார்கள் என்று எந்தவித உத்தரவாதமும் தர முடியாது. தமது சமூகத்தில் இருக்கக்கூடிய தமது அந்தஸ்தைப் பெண்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இல்லைஎன்றால், அவர்கள் தமது கணவர்கள் மற்றும் வருங்கால சந்ததிகள் ஆகியோருக்கு கட்டுப்படாதவர்களாகவும், அவர்களின் உரிமையை செலுத்தாதவர்களாகவும் புரியப்படுவார்கள். இவை அனைத்தையும் விட அதிகமாக, தம்மைப் படைத்த இறைவனுக்கு அவர்கள் நன்றி மறப்பவர்களாக இருப்பார்கள். ஒவ்வோர் அஹ்மதிப் பெண்ணும் தமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். அல்லாஹ் தமக்கு வழி காட்ட வேண்டும் என்றும், தமது வருங்கால சந்ததிகளை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப வளர்க்கத் தகுதி உள்ளவர்களாக அவர்களை ஆக்க வேண்டும் என்றும் அவர்கள் எப்பொழுதும் துஆ செய்து வர வேண்டும்.

எனது சொற்பொழிவின் ஒருபகுதி, சந்ததிகளின் தர்பிய்யத்தும் ஒரு தாயினுடைய பொறுப்புகள் தொடர்பான சில அம்சங்களும் என்பதாகும். அப்பகுதியை நான் எடுத்துரைக்கிறேன்.

### இறைவனுடன் அன்பு:

சந்ததிகளின் தர்பிய்யத்திற்கு அனைத்தையும் விட முதலாவதாக, இறைவனுடன் நேசம் கொள்வதும், அவனுடன் முழுமையான தொடர்பை உருவாக்குவதும் அவசியமாகும். ஆகவே, ஒரு தாய் தனது படைப்பின் நோக்கத்தைப் புரிந்தவாறு, இறைவனுக்கு முன்னால் குனியக்கூடிவளாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் உள்ளத்தில் ஆரம்பத்தில் இருந்தே இறைநேசத்தை உருவாக்கி விட வேண்டும். தமது சந்ததிகளுக்கு இந்த வகையில் தர்பிய்யத்தைக் கொடுக்கக் கூடியவளாக ஒரு தாய் இருப்பது அவசியமாகும்.



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: குழந்தை-களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய முதல் விஷயம் என்னவென்றால் அது லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதாகும். குழந்தையின் காதில் விழக்கூடிய முதல் விஷயம் இறைவனுடைய மகத்துவம் மற்றும் பெருமை குறித்த பாடமாக இருக்க வேண்டும். புதிதாக பிறந்த குழந்தையின் தர்பிய்யத் எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததும் அவசிய-மிக்கதும் என்றால், குழந்தை-யினுடைய காதில் அனைத்தையும் விட முதலாவதாக பாங்கு கூற வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

பிள்ளைகள் வளர்ந்து கொண்டு செல்லும்போது சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு அல்லாஹ்வுடைய அருள்களைக் குறித்தும், பேருபகாரங்களைக் குறித்தும் எடுத்துக் கூறி இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக அவர்களை ஆக்குவது தாய்மார்களுடைய கடமையாகும். ஆகவே, இவ்வகையில் அல்லாஹ்வுடைய நேசத்தைக் குழந்தைகளின் உள்ளத்தில் உருவாக்குங்கள். உதாரணமாக, உண்ணும் போதும் அருந்தும் போதும் குழந்தைகளிடம், இந்த உணவை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். இது கடும் உழைப்பிற்குப் பிறகு நம்மை வந்தடைந்துள்ளது. இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். அவ்வாறே, உறங்கும்போது நட்சத்திரங்கள், சந்திரன், வானம் மற்றும் பகலில் தென்படக்கூடிய பிற காட்சிகளைச் சுட்டிக் காட்டி இறைவன் பக்கம் (தாய்மார்கள்) கவனமூட்ட முடியும்.

நம் அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

"குழந்தைப் பருவத்தில் இருந்து அல்லாஹ்வுடைய நேசத்தை உள்ளங்களில் உருவாக்கி விடுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறியிருப்பது போன்று, ரஹ்மானின் அடியானை உருவாக்குங்கள். குழந்தைப் பருவத்தில் இருந்து அல்லாஹ்வின் நேசத்தை உள்ளங்களில் உருவாக்கி விடுங்கள். (குழந்தைகள்) விஷயங்களைப் புரிய ஆரம்பிக்கும் போது அவர்களுக்கு எந்தப் பொருள் கொடுத்தாலும், இதை அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்துள்ளான் என்று கூறி கொடுங்கள். நன்றி செலுத்தக்கூடிய பழக்கத்தை உருவாக்குங்கள். எந்தப் பொருளை வேண்டினாலும் அல்லாஹ்விடம் வேண்ட வேண்டும் என்று கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய வையுங்கள்."

(2003-ஆம் ஆண்டு பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு)

*(தொடர்ச்சி 21-ஆம் பக்கம்...)*

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

3

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## முபாரக் மஸ்ஜிது தொடர்பான இல்ஹாம்களும் நிகழ்வுகளும்

முபாரக் மஸ்ஜிதுக்கு இன்னொரு பெயர் ‘பைத்துஸ் ஸிக்ர்’ என்பதாகும். இந்த மஸ்ஜிதைப் பற்றி அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விளித்தவாறு இவ்வாறு கூறினான்:

أَلَمْ نَجْعَلْ لَّكَ سُهُوْلَةً فِيْ كُلِّ اَمْرٍ۔ بَيْتُ الْفِكْرِ وَبَيْتُ الذِّكْرِ وَمَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا۔

1) அலம் நஜ்அல்லக சுஹூலதன் ∴பீகுல்லிஅம்ரின் - பைத்துல் ∴பிக்ரி வ பைத்துஸ் ஸிக்ரி. வமன் தகலஹூ கான ஆமினா. (தஸ்கிரா பக்கம் 82)

பொருள்: “நாம் உமக்கு பைத்துல் ∴பிக்ரையும், பைத்துஸ் ஸிக்ரையும் (அதாவது பைத்துஸ் ஸிக்ர் ஆகிய முபாரக் மஸ்ஜிதையும் - மொழிபெயர்ப்பாளர்) வழங்கி ஒவ்வொரு விஷயத்திலும் உமக்கு எளிதானதை வழங்கவில்லையா? மேலும் எவர் இதில் நுழைவாரோ அவர் அமைதியில் வந்து விடுவார்.” (அதாவது அமைதி பெற்றவராகி விடுவார் - மொழிபெயர்ப்பாளர்)

2) “எவர் இந்த ‘பைத்துஸ் ஸிக்ர்’-ல் (அதாவது முபாரக் மஸ்ஜிதில்) கலப்பற்ற தன்மையுடனும், குறிக்கோளுடனும், இறைவணக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனும், நல்ல நிய்யத்துடனும், அழகிய ஈமானுடனும் நுழைவாரோ, அவர் தீய முடிவை அடைவதிலிருந்து பாதுகாப்பில் வந்து விடுவார்.” (தத்கிரா பக்கம் 83 பதிப்பு 6 காதியான் 2006)

مُبَارِكٌ وَّمُبَارَكٌ وَّكُلُّ اَمْرٍ مُّبَارَكٍ يُّجْعَلُ فِيْهِ -

3) முபாரிகுன்வ் வமுபாரகுன்வ் வகுல்லு அம்ரின்ம் முபாரகின்ய்யுஜ்அலு ∴பீஹி

பொருள்: இந்த மஸ்ஜிது அருளை வழங்கக் கூடியது ஆகும். மேலும் இது அருளைப் பெற்றதும் ஆகும். (அதாவது இதற்கு அருள் வழங்கப்பட்டிருக்கிறது.) (தத்கிரா பக்கம் 83 பதிப்பு 6 காதியான் 2006)

4) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“இந்த மஸ்ஜிதைப் பற்றி ஐந்து முறை இந்த இல்ஹாம் இறங்கியது:

فِيْهِ بَرَكَاتٌ لِّلنَّاسِ۔ وَمَنْ دَخَلَهٗ كَانَ اٰمِنًا

(∴பீஹி பரகாத்துன் லின்னாஸ். வமன் தகலஹூ கான ஆமினா).

பொருள்: (மஸ்ஜித் ஆகிய) இதில் மக்களுக்கு அருள்கள் இருக்கின்றன. மேலும் எவர் இதில் நுழைவாரோ, அவர் அமைதியில் வந்து விடுவார். (அதாவது அமைதி பெற்றவராகி விடுவார் - மொழிபெயர்ப்பாளர்).

5) “இன்று இரவு எத்தகு அற்புதமான கனவு வந்தது என்றால், இந்த எளியவனுக்கு அடையாளம் தெரியாத சில நபர்கள் இருக்கின்றனர். அவர்கள் பச்சை நிறமுள்ள மையினால் (முபாரக்) மஸ்ஜிதின் வாயிலின் முகப்பில் சில ஆயத்துகளை (வசனங்களை) எழுதுகின்றனர்......... அப்போது இந்த எளியவன் அந்த ஆயத்துகளை (வசனங்களை) படிக்கத் துவங்கினேன். அதில் ஓர் ஆயத் (வசனம்) நினைவில் இருந்தது. மேலும் அது, لَا رَآدَّ لِفَضْلِهٖ (லா ராத்த லி∴பழ்லிஹீ) என்பதாகும். (இதன் பொருள்) மேலும் உண்மையில் இறைவனின் அருளை யாரால் தடுக்க முடியும்?” (தஸ்கிரா பக்கம் 88 பதிப்பு 6 காதியான் 2006)

6) “ஒருமுறை உம்முல் மு∴மினீன் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் நோயுற்றார்கள். மேலும் ஏறக்குறைய 40 நாட்கள் வரை நோயாளியாக இருந்தார்கள். ஒருநாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த முபாரக் மஸ்ஜிதைப் பற்றி, مُبَارَكٌ وَّمُبَارَكٌ كُلٌّ يُّجْعَلُ فِيْهَا مُبَارَكٌ (முபாரகுன்வ் வமுபாரகுன் குல்லுன்ய்யுஜ்அலு ∴பீஹா முபாரகுன் - பொருள்: அருள் ஆகும்; அருள் ஆகும். இதில் உள்ள ஒவ்வொன்றும் அருளுக்குரியதாக ஆக்கப்படும்) என்ற இல்ஹாம்



இருக்கிறது. எனவே (முபாரக் மஸ்ஜிது ஆகிய) இதில் சென்று மருந்து கொடுங்கள் என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் இங்கு வந்து மருந்து அருந்தக் கொடுத்தார்கள்.

இரண்டு மணி நேரத்திற்குள் உம்முல் மு.ஃமினீன் (ரலியல்லாஹுஅன்ஹா) அவர்கள் உடல் நலம் பெற்று விட்டார்கள்." (அல்.ஃபஸ்ல் பத்திரிகை 14, பிப்ரவரி 1921 பக்கம் 21)

7) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"நமது (முபாரக்) மஸ்ஜிதை அல்லாஹ் நூஹின் கப்பலுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான். எனவே முபாரக் மஸ்ஜிது ஆகிய) இது வடிவத்திலும் கப்பலைப் போன்று இருக்கிறது."

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 730, ரிவாயத் எண்: 795 காதியான் பதிப்பு 2008)

8) ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"ஹஸ்ரத் (அலை) சாஹிப் அவர்களின் காலத்தில் மக்கள் தொழுகைகளில் - குறிப்பாக சஜ்தாக்களில் இன்றைய நாட்களை விட அதிகமாக மக்கள் அழுவதை இந்த எளியவன் கேட்டிருக்கிறேன். அழும் குரல்கள் மஸ்ஜிதின் ஒவ்வொரு மூலைகளிலும் கேட்டுக் கொண்டிருந்ததன. மேலும் ஹஸ்ரத் (அலை) சாஹிப் அவர்கள் தமது ஜமாஅத்தின் இந்த அழுகையைப் பற்றி பெருமையுடன் கூறியிருக்கிறார்கள்."

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 620, ரிவாயத் எண்: 666 காதியான் பதிப்பு 2008)



9) ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

"ஷாஹ்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாபின் ஆற்றங்கரையோரக் குடியிருப்போர் எண்: 9-ல் உள்ள ச.ஃபைத் போஷ் கிராமத்தின் வரி வசூலிப்பவர் ஆகிய சவ்திரி ஹாக்கிம் அலீ சாஹிப் அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யா பேராசிரியர் ஆகிய மவ்லவி முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் மூலமாக என்னிடம் கூறினார்கள்: 1900-ஆம் ஆண்டுக்கு அருகில் அல்லது அதற்கு சற்று முன்னர் நடந்த விஷயம் என்னவெனில், ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாரக் மஸ்ஜிதில் .ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, இந்த நேரத்தில் தற்போது உம்மிடம் இருக்கின்ற -வர்கள், உம்மிடம் இருப்பவர்கள் ஆகிய அனைவரின் பாவங்களையும் நான் மன்னித்து விட்டேன் என்று இறைவன் தன்னிடம் கூறியிருக்கிறான் என்று கூறினார்கள்." (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 131, ரிவாயத் எண்: 1168 காதியான் பதிப்பு 2008)

"சிக்வான் ஊரைச் சேர்ந்த மியான் இமாமுத்தீன் சாஹிப் இவ்வாறு கூறினார்கள்: ஒருநாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாரக் மஸ்ஜிதில் .ஃபஜ்ர் தொழுகைக்குக் கொஞ்சம் முன்னால் வந்தார்கள். இன்னும் (காலையின்) எந்த வெளிச்சமும் ஏற்பட்டிருக்கவில்லை. அந்த நேரத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் மஸ்ஜிதின் உள்ளே இருட்டிலேயே அமர்ந்து கொண்டிருந்தார்கள். பின்னர் ஒரு நபர் வந்து விளக்கை ஏற்றியபோது, ஒளிக்கு முன்னால் இருள் எவ்வாறு ஓடி விட்டது பாருங்கள் என்று கூறினார்கள்." (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 801, ரிவாயத் எண்: 930 காதியான் பதிப்பு 2008)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

"ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் என்னிடம் கூறியதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில், மர்ஹூம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் உயிருடன் இருந்தபோது அவர்கள் ஒவ்வொரு .ஃபர்ழ் தொழுகையிலும் குனூத் ஓதி வந்திருந்தார்கள். மேலும் .ஃபஜ்ர், மக்ரிப், இஷா ஆகிய தொழுகைகளிலும் சத்தத்துடன் குனூத் ஓதப்பட்டு வந்தது. குனூத்தில் முதலில் திருக்குர்ஆனின் துஆக்களும், பின்னர் ஹதீஸிலுள்ள துஆக்களும் வழக்கமாக இருந்து வந்தன. இறுதியில் சலாவத் ஓதி சஜ்தாவுக்கு சென்று விடுவார்கள். (ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களால்) எந்த துஆக்கள் அதிகமாக ஓதப்பட்டு வந்தனவோ அவற்றை நான் குறிப்பிட்டு விடுகிறேன்.

رَبَّنَآ اٰتِنَا فِی الدُّنۡیَا حَسَنَۃً وَّ فِی الۡاٰخِرَۃِ حَسَنَۃً وَّ قِنَا عَذَابَ النَّارِ

(ரப்பனா ஆத்தினா .ஃபித்துன்யா ஹஸனதன்வ் வ.ஃபில் ஆகிரத்தி ஹஸனதன்வ் வகினா அஸாபன்னார்)

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக). மேலும் நெருப்பின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்று -வாயாக. (2:202)

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدۡتَّنَا عَلٰی رُسُلِکَ

(ரப்பனா வஆத்தினா மாவத்தனா அலா ருஸுலிக)

பொருள்: எங்கள் இறைவா! நீ உன் தூதர்கள் மூலமாக எங்களுக்கு வாக்களித்தவற்றையெல்லாம் எங்களுக்குத் தருவாயாக. (3:195)

رَبَّنَا ظَلَمۡنَاۤ اَنۡفُسَنَا وَاِنۡ لَّمۡ تَغۡفِرۡ لَنَا وَتَرۡحَمۡنَا لَنَکُوۡنَنَّ مِنَ الۡخٰسِرِیۡنَ

(ரப்பனா ழலம்னா அன்.ஃபுஸனா வஇன்ல் லம்தக்.ஃபிர் லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் காஸிரீன்)

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து, எங்களுக்குக் கருணை காட்டாவிட்டால், நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சேர்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

رَبَّنَا هَبۡ لَنَا مِنۡ اَزۡوَاجِنَا وَذُرِّیّٰتِنَا قُرَّۃَ اَعۡیُنٍ وَّ اجۡعَلۡنَا لِلۡمُتَّقِیۡنَ اِمَامًا

(ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வஸுர்ரிய் யாதினா குர்ரத்த அ.ஃயுனிவ் வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா)

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும், எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிப்பவர்களாக ஆக்குவாயாக. மேலும் எங்களை இறையச்சம் கொண்டவர்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்குவாயாக. (25:75)

رَبَّنَا لَا تُؤَاخِذْنَآ اِنْ نَّسِيْنَآ اَوْ اَخْطَاْنَا

ரப்பனா லாதுஆகிஸ்னா இன்னஸீனா அவ் அக்த.்.னா)

எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ அல்லது தவறிழைத்தாலோ நீ எங்களைத் தண்டிக்காதிருப்பாயாக...... (2:287)

رَبَّنَا اصْرِفْ عَنَّا عَذَابَ جَهَنَّمَ ۖ اِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا

(ரப்பனஸ்ரி.்.ப் அன்னா அஸாப ஜஹன்னம இன்னஅஸாபஹா கான கராமா)

பொருள்: "எங்கள் இறைவா! எங்களிடமிருந்து நரகத் தண்டனையை அகற்றி விடுவாயாக. நிச்சயமாக அதன் தண்டனை ஒரு பெரும் வேதனையாகும்." (25:66)

رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَبَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَاَنْتَ خَيْرُ الْفٰتِحِيْنَ

(ரப்பன.்.ப்தஹ் பைனனா வ பைன கவ்மினா பில் ஹக்கி வ அன்த்த கைருல் .்.பாதிஹீன்.)

(பொருள்: "எங்கள் இறைவா! எங்களுக்கும் எங்கள் சமுதாயத்தினருக்குமிடையே உண்மையான தீர்ப்பு வழங்குவாயாக. மேலும் தீர்ப்பு வழங்குபவர்களுள் நீயே சிறந்தவன் ஆவாய்." (7:90)

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلْقَوْمِ الظّٰلِمِيْنَ

(ரப்பனா லாதஜ்அல்னா .்.பித்னதன்ல் லில் கவ்மிழ் ழாலிமீன்)

பொருள்: "எங்கள் இறைவா! அநீதியிழைக்கின்ற மக்களுக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்காதிருப்பா -யாக." (10:86)

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا (ரப்பனா லாதுஸிக் குலூபனா பஅத இஸ் ஹதய்தனா .........)

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களை கோணலாக்கா -திருப்பாயாக. (3:9)

رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا

(ரப்பனா இன்னனா சமி.்.னா முனாதியன்ய் யுனாதீ லில் ஈமானி அன் ஆமினூபிரப்பிக்கும் .்.பஆமன்னா).

பொருள்: எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று கூறி, நம்பிக்கையின் பக்கம் அழைக்கும் ஓர் அழைப்பவரின் குரலை நிச்சயமாக நாங்கள் செவியேற்றோம்........... (3:194)

اَللّٰهُمَّ اَيِّدِ الْاِسْلَامَ وَالْمُسْلِمِيْنَ بِالْاِمَامِ الْحَكَمِ الْعَادِلِ۔

(அல்லாஹும்ம அய்யிதில் இஸ்லாம வல் முஸ்லிமீன பில் இமாமில் ஹகமில் ஆதில்)

பொருள்: அல்லாஹ்வே! நீதி தீர்ப்பளிக்கின்ற இமாமின் மூலமாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் நீ வலுவூட்டுவாயாக.

اَللّٰهُمَّ انْصُرْ مَنْ نَصَرَ دِيْنَ مُحَمَّدٍ وَاجْعَلْنَا مِنْهُمْ
وَاخْذُلْ مَنْ خَذَلَ دِيْنَ مُحَمَّدٍ وَّلَا تَجْعَلْنَا مِنْهُمْ

(அல்லாஹும்மன்ஸுர் மன் நஸர தீன முஹம்மதின் வஜ்அல்னா மின்ஹும். வக்ஸுல் மன் கஸல தீன முஹம்மதின் வலா தஜ்அல்னா மின்ஹும்).




பொருள்: அல்லாஹ்வே! எவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு உதவி செய்கிறாரோ, அவருக்கு நீ உதவி செய்வாயாக. மேலும் நீ எங்களை அவர்களைச் சேர்ந்தவர்களாக ஆக்குவாயாக. மேலும் எவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தை விட்டு விட்டாரோ அவர்களை நீ விட்டு விடுவாயாக.

தொடர்ந்து ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: எளியவன் கூறுவது என்னவெனில், இறுதியில் உள்ளதற்கு முந்தைய துஆவாகிய (அதாவது அல்லாஹ்வே! நீதி தீர்ப்பளிக்கின்ற இமாமின் மூலமாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் நீ வலுவூட்டுவாயாக) என்ற துஆவில் உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தைப் பற்றிய துஆ இருக்கிறது. ஆனால் அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, இப்போது முஸ்லிம்களுக்கு அவர்கள் (அலை) மீது ஈமான் கொள்ளும் நல்வாய்ப்பு வழங்குவானாக என்ற பொருள் இருப்பதாகக் கருதப்படும். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 805 ரிவாயத் எண்: 939 காதியான் பதிப்பு 2008)

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"ஒருமுறை குஜராத்தில் வாழும் ஓர் இந்து ஏதோ ஒரு திருமணக் கூட்டத்துடன் காதியான் வந்தார். அந்த நபர் மனோவசீகர ஞானத்தில் அதிக திறமையுள்ளவராக இருந்தார். அதன்படி, அவர் தனது நண்பர்களிடம், நாம் காதியான் வந்துள்ளோம். வாருங்கள். மிர்ஸா சாஹிப் (அலை) அவர்களைச் சந்தித்து வருவோம் என்று கூறினார். அவரது நோக்கம், அவர் தனது மனோவசீகரத்தால் மிர்ஸா சாஹிப் (அலை) அவர்கள் மீது தாக்கத்தை உருவாக்கி, கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் அவர்களிடமிருந்து ஏதாவது முட்டாள்தனமான செயலை செய்ய வைக்க வேண்டும் என்பதாக இருந்தது.

அவர் ஹுஸுர் (அலை) அவர்களைப் பள்ளிவாயிலில் சந்தித்தபோது, அவர் தனது வசீகர அறிவினால் ஹுஸுர் (அலை) அவர்கள் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்யத் துவங்கி விட்டார். ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர் உடனே நடுங்கி விட்டார். ஆயினும் சமாளித்துக் கொண்டவாறு உட்கார்ந்து விட்டார். மீண்டும் தனது

வேலையை செய்யத் துவங்கி விட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் தமது பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் மீண்டும் அவரது உடலில் ஒரு கடுமையான நடுக்கம் வந்தது. மேலும் அவரது வாயிலிருந்தும் கொஞ்சம் அச்சத்தின் குரல் வெளியானது. ஆயினும் அவர் மீண்டும் சமாளித்துக் கொண்டார். எனினும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர் அலறி விட்டார். மேலும் பைத்தியமாகி பள்ளிவாயிலிலிருந்து வெருண்டோடி விட்டார். மேலும் செருப்பு அணிந்தபடியே வெருண்டோடியவாறு கீழே இறங்கி விட்டார். அவரது நண்பர்களும், மற்றவர்களும் அவருக்குப் பின்னால் வெருண்டோடியவாறு அவரைப் பிடித்துக் கட்டுப்படுத்தினர்.

அவரது உணர்வு அசல் நிலைக்குத் திரும்பியபோது அவர் கூறியதாவது, நான் மனோவசீகரத்தில் மிகப் பெரிய திறமையுள்ளவன் ஆவேன். எனவே நான் மிர்ஸா சாஹிப் மீது எனது மனோவசீகர ஆற்றலை உருவாக்கி, கூட்டத்தில் இருப்பவர்களுக்கு நடுவில் அவரிடமிருந்து ஏதாவதொரு வீணான அசைவுகளை செய்ய வைக்க விரும்பினேன். ஆனால் நான் வசீகர கவனத்தை செலுத்தியபோது, எனக்கு முன்னால் - ஆயினும் ஒரு குறிப்பிட்ட தொலைவில் ஒரு சிங்கம் அமர்ந்திருக்கிறது எனக் கண்டேன். மேலும் அதைப் பார்த்து நடுங்கி விட்டேன். ஆனால் இது எனது கற்பனைதான் என உள்ளத்திலேயே என்னை நானே தூற்றிக் கொண்டேன். நான் பின்னர் மிர்ஸா சாஹிப் (அலை) அவர்களின் மீது வசீகரம் செய்வதற்காக கவனத்தை ஒன்று கூட்டத் துவங்கியபோது, பின்னர் அதே சிங்கம் எனக்கு முன்னால் இருப்பதையும், எனது அருகில் வந்து விட்டதையும் நான் கண்டேன். அதனால் எனது உடலில் மீண்டும் கடும் நடுக்கம் ஏற்பட்டு விட்டது. ஆயினும் பின்னர் நான் சமாளித்துக் கொண்டேன். வெறுமனே எனது உள்ளத்தில் கற்பனையால் பயம் ஏற்பட்டு விட்டது என்று என்னை நானே தூற்றிக் கொண்டேன். எனவே நான் எனது மனதை உறுதிப்படுத்தியவாறு, எனது ஆற்றலை ஒன்று கூட்டியவாறு, பின்னரும் மிர்ஸா சாஹிப் மீது எனது வசீகர கவனத்தின் தாக்கத்தை இட்டவாறு, மிகவும் அழுத்தம் கொடுத்தேன். அதனால் நான் திடீரென்று, அதே சிங்கம் என் மீது குதித்து தாக்கிக் கொண்டிருப்பதாகக் கண்டேன். அந்த நேரத்தில் நான் என்னையும் மீறி கூச்சலிட்டேன். அங்கிருந்து வெருண்டோடுவதற்காக எழுந்தேன் என்றார்............ அதற்குப் பின்னர் அந்த மனிதர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது அதிக நம்பிக்கை கொண்டவராகி விட்டார். அவர் உயிருடன் இருக்கும் வரை அவர் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்." (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 55, ரிவாயத் எண்: 75 காதியான் பதிப்பு 2008)

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1944-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் நாள் முபாரக் மஸ்ஜிதில் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு இதே மஸ்ஜிதைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்:

"இது பரக்கத்தை (இறையருளை)க் கொடுக்கும் இடம் ஆகும். இது பரக்கத்துகள் (இறையருள்கள்) இறங்கும் இடமாகும். மேலும் இங்கு செய்யப்படும் ஒவ்வொரு வேலையும் முபாரக் (அருளுக்குரியது) ஆக இருக்கும். இந்த விஷயத்தைக் கூறுபவர் ஏதாவதொரு மனிதர் அல்லர். மாறாக, இறைவன் கூறிக் கொண்டிருக்கிறான். இறைவன் ஒரு பொருளை முபாரக் (அருளுக்குரியது) என ஒருமுறை குறிப்பிட்டு விட்டால், அப்போதும் அதன் பரக்கத்தை (அருளை) மறுக்க முடியாது. ஆனால் இந்த மஸ்ஜிது எத்தகையது என்றால், இறைவன் இதை மீண்டும் மீண்டும் முபாரக் (அருளுக்குரியது) என்று கூறினான். மேலும் இந்த மஸ்ஜிது பரக்கத் (அருளை) வழங்கக் கூடியது, பரக்கத்துகள் (அருள்கள்) இறங்குவதற்கான இடம் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, இந்த மஸ்ஜிதில் செய்யப்படும் ஒவ்வொரு வேலையும் பரக்கத்திற்குரியதாக (அருள்களுக்-குரியதாக) இருக்கும் என்றும் கூறியிருக்கிறான்.

இதன் பொருள், இந்த மஸ்ஜிதில் நிறைவேற்றப்படும் தொழுகை முபாரக் (அருளுக்குரியது) ஆகும். இந்த மஸ்ஜிதில் செய்யப்படும் சஜ்தா முபாரக் (அருளுக்குரியது) ஆகும். இந்த மஸ்ஜிதில் செய்யப்படும் கியாம் (தொழுகையில் நிற்கும் நிலை) முபாரக் (அருளுக்குரியது) ஆகும். இந்த மஸ்ஜிதில் கூறப்படும் தஷஹ்ஹுது (கலிமாவின் சொல்லாகிய அஷ்ஹது எனக் கூறுவது) முபாரக் (அருளுக்குரியது) ஆகும். இந்த மஸ்ஜிதில் கூறப்படும் சலாம் முபாரக் (அருளுக்குரியது) ஆகும். இந்த மஸ்ஜிதில்




செய்யப்படும் துஆக்கள் முபாரக் (அருளுக்குரியவை) ஆகும். இறைவனிடமிருந்து இவ்வளவு பரக்கத்துகள் (இறை அருள்கள்), இவ்வளவு மகத்தான பரக்கத்துகள் (இறை அருள்கள்) இறங்கிக் கொண்டிருக்கும் போது, மனிதன் அந்த பரக்கத்துகளிலிருந்து (இறையருள்களிலிருந்து) முகத்தைத் திருப்பிச் சென்று விட்டால்....... அதை விட அதிக இழப்பிற்குரிய, பேறிழந்த மனிதன் யார் இருக்க முடியும்?" (அல்ஃபஸ்ல் பத்திரிகை 6, ஏப்ரல் 1944 தொகுதி 32 பக்கம் 1)

மேற்கூறப்பட்ட இல்ஹாம்கள் மற்றும் வழிகாட்டல்களில் இருந்து முபாரக் மஸ்ஜிதின் முக்கியத்துவமும், அந்தஸ்தும் தெளிவாகிறது. கண்ணியத்துக்குரிய சகோதரர்கள் இதில் அதிகமான துஆக்களை செய்ய வேண்டும். ஃபர்ழ் தொழுகைகள் மட்டுமின்றி, மற்ற நேரங்களிலும் முபாரக் மஸ்ஜிதில் நஃபிலான தொழுகைகளைத் தொழ-லாம். ஜல்ஸா சாலானாவின் (ஆண்டு மாநாட்டின்) நாட்கள் மட்டுமின்றி, எஞ்சிய நாட்களிலும் ஜமாஅத்தான



தொழுகைகளை நிறைவேற்றுவதற்காகவும், நஃபில்களை நிறைவேற்றுவதற்காகவும் முபாரக் மஸ்ஜிது எப்போதும் திறந்தே இருக்கிறது.

### சிவப்பு அடையாளத்தைக் கொண்ட அறை

முபாரக் மஸ்ஜிதின் பழைய பகுதியின் கிழக்கு திசையில் ஏணிகளை ஒட்டியவாறு இந்த அறை இருக்கிறது. 1885-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10-ஆம் தேதி அதாவது ஹிஜ்ரி 1302-ஆம் ஆண்டு ரமலான் மாதம் 27-ஆம் நாள் நடந்த நிகழ்வு என்னவெனில், அந்தக் காலத்தில் குளியலறையாக பயன்படுத்தப்பட்டு வந்த அந்த அறையிலேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கிழக்கும், மேற்குமாக விரிக்கப்பட்டிருந்த கட்டிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். தரை புதிதாக பூசப்பட்டிருந்த காரணத்தால், அறையின் இயற்கையான சூழலில் குளிர் போன்று இருந்தது. கட்டிலில் எந்த மெத்தையோ, தலையணையோ இருந்ததில்லை. மேலும் ஹஸ்ரத் (அலை) சாஹிப் இடது பக்கம் திரும்பிப் படுத்தவாறு இடது முழங்கையைத் தலையின் கீழ் வைத்-திருந்தார்கள். மேலும் அருளுக்குரிய முகத்தை வலது கையால் மூடியவாறு இருந்தார்கள்.



முன்ஷி அப்துல்லாஹ் சனோரி சாஹிப் (ரலி) அவர்கள் சிவப்புத் துளி அற்புதம் வெளிப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சட்டையுடன்

மேலும் ஹுஸூர் (அலை) அவர்களின் கலப்பற்ற தொண்டராகிய சனூரி என்ற ஊரைச் சேர்ந்த முன்ஷி அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கீழே அமர்ந்தவாறு ஹுஸூர் (அலை) அவர்களின் கால்களை அமுக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்கள் கஷ்.:.ப் (ஆன்மீகக்) காட்சியின் நிலையில், வருங்காலங்களில் இவ்வாறு நடக்கும் என்ற இறைநியதிகளின் சில கட்டளைகளை தமது கைகளால் எழுதி அதில் கையொப்பமிடுவதற்காக முழுமையான வல்லமையுள்ளவ-னாகிய இறைவனுக்கு முன்னால் எடுத்து வைத்தார்கள். மேலும் ஓர் அதிகாரியின் வடிவத்தில் தோன்றிய அவன் தனது எழுதுகோலை சிவப்பு மையின் புட்டியில் முக்கியவாறு முதலில் அந்த மையை ஹுஸூர் (அலை) அவர்களின் பக்கம் தெளித்தான். மேலும் மிஞ்சிய மை, எழுதுகோலின் முனையில் எஞ்சியிருந்து விட்டது. மேலும் அவன் நியதிகளைக் கொண்ட நூலில் கையெழுத்திட்டு விட்டதாகக் கண்டார்கள்.

இறைவனின் மு.:.ஜிஸாவை(அற்புதத்தை)க் காட்டும் அடையாளத்தைப் பாருங்கள்! அங்கு கஷ்.:.ப் (ஆன்மீக)க் காட்சியின் நிலைமையில் எழுதுகோலின் சிவப்பு மைத்துளி தெளிக்கப்பட்டது. இங்கு அந்த சிவப்புத் துளி வெளிப்படையான நிலையில் மாறி விட்டது. முன்ஷி சாஹிப் (ரலி) அவர்கள் கடும் வியப்பிற்குள்ளாகி, ஹுஸூர் (அலை) அவர்களின் முழங்காலில் ஒரு சிவப்பு நிறத் துளி விழுந்திருக்கிறது என்பதைத் தமது கண்களால் கண்டார்கள். அவர்கள் தமது வலது கையின் சுட்டு விரலை அந்தத் துளியில் வைத்தபோது அந்தத் துளி முழங்காலிலும், கால் விரலிலும் பரவி விட்டது. அப்போது அவர்களின் உள்ளத்தில், صِبْغَةَ اللّٰهِ ۚ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً (சிப்கதல்லாஹ் வமன் அஹ்சனு மினல்லாஹி சிப்கா - அல்லாஹ்வின் நிறத்தை (அதாவது பண்பை) ஏற்போம். அல்லாஹ்வை விட நிறத்தில் (பண்பில்) மிக அழகானவன் எவன் என்ற (2:139) வசனம் கடந்து சென்றது."

அப்போது (சனூரி என்ற ஊரைச் சேர்ந்த முன்ஷி அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு இது அல்லாஹ்வின் நிறமாக இருக்கும்போது அதில் நறுமணமும் இருக்கும் என்று சிந்தித்தார்கள். ஆனால் அதில் நறுமணம் இருக்கவில்லை. அவர்கள் இன்னும் அதே வியப்பிலும், ஆச்சரியத்திலுமே இருந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்களின் சட்டையிலும் சிவப்பு நிறத்தின் சில புதிய துளிகள் தென்பட்டன. அவர்கள் வாயடைத்துப் போனவாறு மெதுவாக கட்டிலிருந்து எழுந்தார்கள். மேலும் அவர்கள் அந்த சிவப்பு நிறத் துளிகளைப் பற்றி துருவிப் பார்ப்பதற்காக மேலே இருக்கும் சுவற்றிலுள்ள மேற்கூரையின் மூலை-களிலெல்லாம் முழுமையான நுண்ணிய பார்வையால் பார்த்து முடித்தார்கள். எங்கேயோ ஏதாவது பல்லியின் வால் அறுந்து விட்டதால் இரத்தம் சிந்தியிருக்குமோ என்ற எண்ணமும் தோன்றியது. ஆனால் அதுவோ இறை வல்லமையின் கையால் வெளிப்பட்ட கஷ்.:.ப் (ஆன்மீகக்) காட்சியின் ஒரு மு.:.ஜிஸா (அற்புதம்) ஆக இருந்தது. வெளிப்புறத்தில் அது பற்றி என்ன துப்பு துலங்க முடியும்?

அப்பாவியான அவர் கட்டிலில் அமர்ந்து விட்டார்கள். மேலும் அவர்கள் மீண்டும் கால்களை அமுக்கும் தொண்டில் ஈடுபட்டு விட்டார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் கஷ்.:.ப் (ஆன்மீகக்) காட்சியின் நிலையிலிருந்து விழித்தெழுந்து விட்டார்கள். மேலும் முபாரக் மஸ்ஜிதுக்கு வந்தார்கள். சனூரியைச் சேர்ந்த முன்ஷி அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் மீண்டும் கால்களை அமுக்கத் துவங்கினார்கள். மேலும் இந்த நேரத்திற்கிடையில் நான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், ஹுஸூர்! தங்கள் மீது இந்த சிவப்புத் துளிகள் எங்கிருந்து விழுந்தது என்று கேள்வியும் கேட்டு விட்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள், கவனம் செலுத்தாதவாறு இது மாம்பழச் சாறு ஆக இருக்கும் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு, இது மாம்பழச் சாறு அல்ல. இது சிவப்பு நிறமல்லவா? என்று மீண்டும் கூறப்பட்டபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய தலையைக் கொஞ்சம் அசைத்தவாறு எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். சனூரியைச் சேர்ந்த முன்ஷி அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் சட்டையில் இருந்த அந்த அடையாளத்தைக் காட்டியவாறு, இதுவாகும் என்று கூறினார்கள். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் சட்டையை முன் பக்கம் இழுத்து

(தொடர்ச்சி 20-ஆம் பக்கம்...)




இப்னு யூசுப்

சய்யிதுனா ஹஸ்ரத் கலீ:.பத்துல் மஸீஹ் அல் காமிஸ் அய்யதஹு'ல்லாஹு'தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் வெஸ்ட் பேங்க் ஜமாஅத் சகோதர சகோதரிகளுடன் நடைபெற்ற ஆன்லைன் சந்திப்பு ஜூன் 18, 2021 அன்று MTA-வில் ஒளிபரப்பப்பட்டது. அதில் ஒரு பெண்மணி இவ்வாறு கேள்வி கேட்டார்?

மனிதன் ஒரு ஆன்மீக படித்தரத்திலிருந்து மற்றொரு படித்தரத்திற்கான முன்னேற்றத்தை அடைந்து விட்டான் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வான்?

அதற்கு ஹு'ஸூ'ர் அய்யதஹு'ல்லாஹு'தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

என்னுடைய நோக்கம் மற்றும் என்னுடைய பணி இறை விருப்பத்தைப் பெறுவதற்காக அவனுடைய கட்டளைகளின் படி செயல்படுவது மட்டுமே ஆகும் என்பதை அறிந்து மனிதன் அதற்காக எப்பொழுதும் முயற்சி செய்துக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் இறைவனுடைய எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அதில் ஒரு படித்தரத்தை மட்டும் நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? முதலில் திருக்குர்ஆனிலிருந்து அதைத் தேடுங்கள். திருக்குர்ஆனில் 700 கட்டளைகள் அல்லது ஒரு சில இடங்களில் 1200 கட்டளைகள் உள்ளன என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த 700 அல்லது 1200 கட்டளைகளின் படி நீங்கள் செயல்பட்டீர்களா? அந்த கட்டளைகளைத் தேடினீர்களா? அந்தக் கட்டளைகளைத் தேடி அதன்படி செயல்படுவீர்களாயின் பிறகு மற்ற விஷயத்தின் பக்கம் செல்லுங்கள். இனி நான் வேறு படித்தரத்தைக் காண விரும்புகிறேன் என்று மனிதன் எண்ணும்போது இறைவன் சுயமே அந்தப் படித்தரத்தை வழங்கி விடுவான். மனித முயற்சியினால் அதைப் பெற முடியாது. அதைப் பெறுவதற்காக ஒரு மு:.மினின் பணி என்னவென்றால், இறை கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹு'ஸூ'ர் அவர்களின் இந்த முக்கியமான வழிகாட்டலைக் கருத்தில் கொண்டவாறு நுபுவ்வத் வழி வாசகர்களுக்கு மதிப்பிற்குரிய ஹனீ:.ப் அஹ்மத் மஹ்மூத் அவர்கள் இயற்றிய 700 இறை கட்டளைகள் என்ற புத்தகத்திலிருந்து திருக்குர்ஆனின் கட்டளைகளை மக்களுக்கு நினைவூட்டும் வகையில் இந்தத் தொடரை துவங்கியுள்ளது. அல்லாஹ் இதை நன்மை மற்றும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது புத்தகமான 'கிஷ்தி நூஹ்'-வில் இவ்வாறு கூறுகிறார்கள்: "எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் இருந்து ஒரு சிறிய கட்டளையையும் விட்டு விடுவாரோ அவர் தனது கரங்களால் ஈடேற்றத்தின் வாசலை அடைத்து விடுகிறார்."

## அத்தியாயம்-1

## எல்லாம் வல்ல அல்லாஹ்

"நமது சொர்க்கம் நம் இறைவன் ஆவான். நம்முடைய அனைத்து இன்பங்களும் நம்முடைய இறைவனில் உள்ளது" (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம்)

### 1. இறைவனின் ஏகத்துவம்

وَلَا تَدۡعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ ۘ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۟ كُلُّ شَیۡءٍ هَالِكٌ اِلَّا وَجۡهَهٗ ؕ
لَهُ الۡحُكۡمُ وَ اِلَیۡهِ تُرۡجَعُوۡنَ

அல்லாஹ்வையன்றி வேறெந்தக் கடவுளையும் நீர் அழைக்காதீர். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. அவனைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவையே. தீர்ப்பு அவனுக்கே உரியது. மேலும் நீங்கள் யாவரும் அவனிடமே திருப்பப்படுவீர்கள். (அல் கஸஸ் 28:89)



قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ

நீர் (மற்றவர்களிடம்) கூறுவீராக! (உண்மையில்) அல்லாஹ் ஒருவனே ஆவான். (அல் இக்லாஸ் 112:2)

فَاعۡلَمۡ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ

எனவே அல்லாஹ்வை அன்றி வேறெவரும் வணக்கத்திற்-குரியவர் இல்லை என்பதை அறிவீராக. (முஹம்மது 47:20)

- அல் பக்கரா 2:164 | ஆலி இம்ரான் 3:19
- அந் நஹ்ல் 16:23 | அல் அன்ஆம் 6:20
- அல் கஹ்:.ப் 18:15 | அல் கஸஸ் 28:71
- அல் :.பாத்திர் 35:4 | அத்துகான் 44:9
- அத்தகாபுன் 64:14 | அல் அன்பியா 21:109
- அல் ஹஜ் 22:35 | அர் ரஅது 13:31
- அத்தவ்பா 9:31

2. வானங்கள் மற்றும் பூமியின் இறைவன் ஒருவனே

وَهُوَ الَّذِي فِي السَّمَاءِ إِلَٰهٌ وَفِي الْأَرْضِ إِلَٰهٌ ۚ وَهُوَ الْحَكِيمُ الْعَلِيمُ

அவனே வானங்களிலும் வணக்கத்திற்குரியவன்; பூமியிலும் வணக்கத்திற்குரியவன். அவன் மிக நுட்பமான ஞானமுள்ளவனும், நன்கு அறிபவனுமாவான். (அஸ்ஸுஃக்ருஃப் 43:85)

3. முக்கடவுள் என்று கூறாதீர்கள்

وَقَالَ اللَّهُ لَا تَتَّخِذُوا إِلَٰهَيْنِ اثْنَيْنِ ۖ إِنَّمَا هُوَ إِلَٰهٌ وَاحِدٌ ۖ فَإِيَّايَ فَارْهَبُونِ

அல்லாஹ் (எப்போதும் ஒவ்வொரு சமுதாயத்தினரிடமும் இவ்வாறே) கூறினான்: நீங்கள் இரண்டு கடவுளரை உருவாக்கிக் கொள்ளாதீர்கள். (உண்மையிலேயே) வணக்கத்திற்குரியவன் அவன் ஒருவனே. எனவே, நீங்கள் எனக்கு மட்டுமே (அஞ்சுங்கள்). (அந் நஹ்ல் 16:52)

وَلَا تَقُولُوا ثَلَاثَةٌ ۚ انْتَهُوا خَيْرًا لَكُمْ ۚ إِنَّمَا اللَّهُ إِلَٰهٌ وَاحِدٌ ۚ

(கடவுள்) மூன்று எனக் கூறாதீர்கள். (அவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நல்லது. நிச்சயமாக வணக்கத்திற்குரிய ஒருவன் அல்லாஹ் மட்டுமே. (அந்நிஸா 4:172)

❖ அல் மாயிதா 5:74

4. இணைவைத்தலை அழித்து விடுவீராக

وَالرُّجْزَ فَاهْجُرْ இறைவனுக்கு இணைவைத்தலை அழித்து விடுவீராக. (அல் முத்தஸ்ஸிர் 74:6)

“தூய்மையற்ற விஷயங்களிலிருந்து முற்றிலும் தனித்-திருங்கள்.” (ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி).

“இவ்வாறாக இந்த வசனம் தனக்குள்ளே இரண்டு விதமான கட்டளைகளை வைத்துள்ளது.”

(ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)

5. இறைவனுக்கு இணை வைப்பது தடுக்கப்பட்டுள்ளது

فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَنْدَادًا وَأَنْتُمْ تَعْلَمُونَ

ஆகவே, நீங்கள் தெரிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள். (அல் பக்கரா 2:23)

وَلَا تَجْعَلُوا مَعَ اللَّهِ إِلَٰهًا آخَرَ ۚ

அல்லாஹ்வுடன் வேறெந்தக் கடவுளையும் நீங்கள் ஏற்படுத்தாதீர்கள். (அஸ் ஸாரிய்யாத் 51:52)

لَا شَرِيكَ لَهُ ۖ وَبِذَٰلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ

அவனுக்கு இணையே இல்லை. இவ்வாறே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பட்டு நடப்பவர்களில் நானே முதல்வன். (அல் அன்ஆம் 6:164)

| | |
|---|---|
| ❖ அல் பக்கரா 2:84 | அந்நிஸா 4:49,117,118 |
| அல் மாயிதா 5:77 | அல் அன்ஆம் 6:101,152 |
| அல்அஃராஃப் 7:34,192 | யூசுஃப் 12:39 |
| அந் நஹ்ல் 16:74 | அல் ஹஜ் 22:63,72 |
| அல் முஃமினூன் 23:60 | அல் ஃபுர்கான் 25:3 |
| அர் ரஅது 13:37 | பனீ இஸ்ராயீல் 17:23,40,112 |

தொடரும்........

*(8-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

தமிழில் தஃப்ஸீர் ஜவாஹிருல் குர்ஆனில் 12:45-வது வசனத்தின் விளக்கத்தில், நபி யூஸுஃபைப் பற்றி அறிமுகம் இல்லாதிருந்த எகிப்து நாட்டு மன்னர் ரய்யான் பின் வலீதுக்கு, நபி யூஸுஃபைப் பற்றிய முழுத் தகவலையும் அறிந்து கொள்ள அவருடைய கனவுகளே காரணமாயின என்று கூறப்பட்டுள்ளது.

மவ்லானா அபுல் கலாம் ஆஸாத்தும், யூஸுஃப் அலியும் தங்கள் ஆங்கில மொழிபெயர்ப்பில், யூஸுஃப் நபி காலத்து எகிப்து அரசனை ‘மன்னன்’ என்று கூறினாலும், அடிக்குறிப்பில் Pharaoh என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## ஃபிர்அவ்னின் சடலம்



இரண்டாம் ரமீசசின் மகன் முஸா நபி (அலை) அவர்களைத் தேடி தொடர்ந்து செல்கையில் அவன் செங்கடலில் மூழ்கடிக்கப்பட்டான். இச் செய்தியை வரலாறு பதிவு செய்வதற்கு முன்பே பைபிளிலும் திருக்குர்-ஆனிலும் இது பற்றிய குறிப்பு உள்ளது. ஃபாரோ-வைப் பற்றிய குறிப்பு பைபிளில் யாத்திராகமம் 14:28-வது வசனத்தில் அவன் நீரில் மூழ்கடிக்கப்-பட்டான் என்று மட்டுமே வருகிறது. ஃபிர்அவ்ன் நீரில் மூழக்டிக்கப்பட்டது பற்றி உலகம் அறிந்தது இது மட்டுமே. ஆனால், திருக்குர்ஆன் வியப்புக்குரிய விதமாக ஒரு முன்னறிவிப்பைக் கூறுகிறது. திருக்குர்ஆன் 10:93-வது வசனத்தில், “உனக்குப் பிறகு வரப்போகிறவர்-களுக்கு நீ ஓர் அடையாளமாக இருப்பதற்காக இப்பொழுது நாம் உன்னுடைய உடல் (எஞ்சியிருக்குமாறு செய்வதன்) மூலம் உனக்கு (ஒரு பகுதி) மீட்பைத் தருகிறோம்” என்று வருகிறது.

ஃபிர்அவ்னின் பாதுகாக்கப்பட்ட சடலத்தை டாக்டர் மாரிஸ் புகைல் 1975-இல் விரிவாக ஆராய்ந்தார். அதன்பின் அச்சடலம் கெய்ரோவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவருடைய ஆய்வின் முடிவு திருக்குர்ஆன் கூறிய முன்னறிவிப்பை உறுதி செய்தது.

ஃபிர்அவ்னின் உடல் மனிதனுக்கு ஓர் அடையாளமாகப் பாதுகாக்கப்பட்டது என 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே திருக்குர்ஆன் முன்னறிவிப்பு செய்து விட்டது. ஆனால் அந்த உடல் கண்டுபிடிக்கப்பட்டது 19-ஆம் நூற்றாண்டில் 1975-ஆம் ஆண்டுதான். திருக்குர்ஆன் இறைவனின் வேதம் என்பதற்குரிய ஆதாரம் இதற்கு மேல் என்ன வேண்டும்?

**A.P.Y. அப்துல் காதிர்**

*(17 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

தமது தலையை அங்கு திருப்பியவாறு துளியைப் பார்த்தார்கள். பிறகு சனூரியைச் சேர்ந்த (முன்ஷி அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றுக் கேற்ப) முந்தைய சான்றோர்களின் சில நிகழ்வுகளைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கிக் குறிப்பிட்டவாறு, இறைவனின் இருப்பு மறைவிலும் மறைவானதாகும். அதை உலகில் இந்தக் கண்களால் காண முடியாது. ஆயினும் அவனுடைய சில ஜமாலி (அழகின் அம்சத்தைக் கொண்ட) பண்புகள் அல்லது ஜலாலி (கம்பீரமான அம்சத்தைக் கொண்ட) பண்புகள் உருவகமாக மாறி சான்றோர்களுக்குக் காட்டப்படுகின்றன என்று கூறினார்கள்.

படைப்பாளனைக் காண்பது பற்றியும், கஷ்ஃப் (ஆன்மீகக்) காட்சிகளின் விஷயங்கள் வெளிப்படையான முறையில் தோன்றுவது பற்றியும் இவ்வாறு விளக்கிய பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (சனூரியைச் சேர்ந்த முன்ஷி அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு கஷ்ஃப் (ஆன்மீகக்) காட்சி பற்றிய முழுமையான விபரத்தைக் கூறினார்கள். அது மட்டுமின்றி, தமது அருளுக்குரிய கையால் கஷ்ஃப் (ஆன்மீகக்) காட்சியில் எழுதுகோலிலிருந்து மையிற்காக தெளிப்பதையும், கையெழுத்திடுவது பற்றிய ஒரு வரைபடத்தையும் வரைந்தார்கள். மேலும் அதே மாதிரி அசைத்தார்கள். மேலும் (சனூரியைச் சேர்ந்த அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், உங்களின் சட்டையையும், தொப்பியையும் பாருங்கள். அவற்றிலும் எங்காவது சிவப்புத் துளிகள் விழுந்ததா இல்லையா என்று கேட்டார்கள். (அப்துல்லாஹ் சனோரி ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பார்த்தபோது அது (எந்தக் கறையுமின்றி) முற்றிலும் சுத்தமாக இருந்தது. ஆயினும் கம்பளித் தொப்பியில் ஒரு துளி காணப்பட்டது.




(சனூரியைச் சேர்ந்த) முன்ஷி (அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்கள், ஹுஸூர்! அற்புதம் வெளிப்பட்ட தங்களின் இந்தச் சட்டையை எனக்கு பரக்கத்திற்காக வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். நல்ல முறையில் நடந்து கொள்ளும் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் இந்த ஈகை குணம் தமது தொண்டர்களுடன் மட்டுமின்றி எதிரிகளுடனும் இருந்தது. ஆயினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (சனூரியைச் சேர்ந்த) முன்ஷி (அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்களின் இந்தக் கோரிக்கையை ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார்கள். மேலும் நமக்குப் பிறகு இதன் மூலமாக ஷிர்க் பரவி விடும் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது என்று கூறினார்கள். மேலும் மக்கள் இதை ஸியாரத் செய்யும் இடமாக உருவாக்கி, அதை வணங்கத் துவங்கி விடுவார்கள் என்று கூறினார்கள். அதற்கு முன்ஷி (அப்துல்லாஹ் சனோரி ரழியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தபர்ருகை பெறுவது (பரக்கத்துகளைக் கொண்ட பொருள்களைப் பெறுவது) என்ற வகையில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நபித்தோழர்கள் (ரழியல்லாஹு அன்ஹும்) அவர்களும் ரஸூல் (ஸல்) அவர்களின் தபர்ருகுகளை (பரக்கத்துகளைக் கொண்ட பொருள்களை)ப் பெற்று வைத்துக் கொண்டிருந்தார்கள்தானே! அவற்றிலிருந்து ஷிர்க் (இணைவைத்தல்) பரவவில்லையே!! என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், மியான் அப்துல்லாஹ்! உண்மையில் விஷயம் என்னவெனில், ரஸூல் (ஸல்) அவர்களின் தபர்ருகுகள் (பரக்கத்துகளைக் கொண்ட பொருள்கள்) எந்த சஹாபிகளிடம் இருந்தனவோ, அவர்கள், தாம் மரணிக்கும்போது அந்த தபர்ருகுகளை (பரக்கத்துகளைக் கொண்ட பொருள்களை) எங்களின் கஃபன் துணியுடன் அடக்கம் செய்து விடுங்கள் (அதாவது புதைத்து விடுங்கள்) என்று வஸிய்யத்துகளை செய்து விட்டுச் சென்றார்கள். (அதாவது வலியுறுத்திக் கட்டளையிட்டுச் சென்றார்கள்). அதன்படி, அவை அவ்வாறே (அவர்களின் கஃபனுடன் அடக்கம்) செய்யப்பட்டன என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி (சனோராவைச் சேர்ந்த மியான் அப்துல்லாஹ் சாஹிப் ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், ஹுஸூர் அவர்களே! 'நானும் இறக்கும் போது அவ்வாறே வஸிய்யத் செய்து விட்டுச் செல்வேன்' என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'சரி இந்த வாக்குறுதியைக் கொடுக்கின்றீர் என்றால், சிவப்புத் துளிபட்ட சட்டையாகிய) இதை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜுமுஆவுக்காக ஆடையை மாற்றினார்கள். மேலும் அந்தச் சட்டையை சனோராவைச் சேர்ந்த முன்ஷி (அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். இந்த முஃஜிஸா (எனும் அற்புதத்தைக் கொண்ட) சட்டை ஒரு வகையான மலர்களைக் கொண்ட ஆடை என்று அழைக்கப்படுகின்றது. மேலும் இலேசான சிவப்பு நிறமும், ரோஜாப்பூ நிறத்தின் சாயலையையும் கொண்டதாக இருந்தது. அதற்கு 43 ஆண்டுகளான நீண்ட காலம் கழிந்தும் மிகச் சிறிய மாற்றம் கூட ஏற்படவில்லை.... சனோராவைச் சேர்ந்த ஹஸ்ரத் முன்ஷி (அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு) சாஹிப் அவர்கள் முஃஜிஸா வெளிப்பட்ட சட்டையை தமது வாழ்க்கை முழுவதும் பாதுகாத்து வந்தார்கள். மேலும் பயணமில்லாத நாட்களிலும், பயணத்தில் இருந்த நாட்களிலும் எப்போதும் தம்முடனேயே வைத்துக் கொண்டு வந்தார்கள். இறுதியில் 1927-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி அவர்கள் மரணத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் இந்த விலைமதிப்பில்லாத சட்டையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வஸிய்யத்திற்கேற்ப பெஹஷ்தி மக்பராவில் மண்ணுடன் புதைக்கப்பட்டது. (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 269)

(தொடரும்...)

*(12 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஒரு தாயினுடைய பொறுப்புகளில் உள்ள இன்னொரு முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு என்னவென்றால், பிள்ளைகளின் உள்ளங்களில் தொழுகையை நிறைவேற்றும் நேசத்தை உருவாக்குவதாகும்.

என் அன்பிற்குரியசகோதரிகளே! தர்பிய்யத், செயலுடன் ஆரம்பமாகிறது என்பதும் ஓர் உண்மையாகும். உதாரணமாக, நாம் கடமைகளைக் கடைபிடிக்கும் போது, தடுக்கப்பட்டவற்றிலிருந்து விலகி இருக்கும் போது நம்முடைய சந்ததிகளும் அவ்வாறே செய்வார்கள் என்பது தவிர்க்க முடியாத விஷயமாகும். நாம் தொழுவதற்காக பள்ளிவாசல் செல்லும்போது நம்முடைய குழந்தைகள் ஓடி வந்து உடன் செல்வார்கள். வீட்டில் தாயார் தொழுதால் சிறு குழந்தைகள் அந்த பாவனையைப் பின்பற்றி சஜ்தா செய்வார்கள். ஆனால், நாமே தொழுகையைக் கடைபிடிக்கவில்லை என்றால், நம்முடைய பிள்ளைகளிடம் தொழுகையைக் கடைபிடிக்குமாறு வலியுறுத்திக் கூறுவோம் என்றால், அவர்கள் தொழுகையாளியாக ஆவார்கள் என்று எதிர்பார்ப்பு வைத்தால் அது வீணான ஒரு எதிர்பார்ப்பாகத் -தான் இருக்கும்.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

“தொழுகை என்பது மனிதவாழ்வின் உயிர் ஆகும். தொழுகை இல்லை என்றால் இறைவனுடன் எவ்வித உறவும் எஞ்சி இருக்காது. ஆகவே, அதற்கான பழக்கத்தை உருவாக்குவதற்காகவும் குழந்தைப் பருவத்தில் இருந்தே தர்பிய்யத் அளிக்க வேண்டியது அவசியம் உள்ளது. திடீரென்று இந்தப் பழக்கம் குழந்தைகளிடத்தில் உருவாக முடியாது. இதற்கான வழிமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கற்றுக் கொடுத்துள்ளார்கள். ஏழு வயதில் இருந்தே அவர்களுடன் சேர்ந்து தொழ ஆரம்பியுங்கள். அன்புடன் இவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளுங்கள். எவ்வித கடுமையையும் காட்ட வேண்டிய அவசியம் கிடையாது. அடிக்க வேண்டிய அவசியம் கிடையாது. அதன் பிறகு அக்குழந்தை பத்து வயது வரை அன்புடனும், நேசத்துடனும் கற்றுக் கொண்டே வரும். பிறகு, 10 வயது முதல் 12 வயதுக்கிடைப்பட்ட காலத்தில் அந்தக் குழந்தையின் மீது கொஞ்சம் கடுமை காட்டுங்கள். ஏனென்றால், அது விளையாட்டுப் பருவமாக இருக்கிறது. அதில் மிகவும் எளிய தண்டனையோ அல்லது கொஞ்சம் கடுமையான வார்த்தைகளையோ கூறுவது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு மிக அவசியமாகும்.” (ஜுமுஆ குத்பா 11 பிப்ரவரி 2000)

ஹஸ்ரத் உம்முல் மு∴மினீன் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்கள் தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். தினந்தோறும் தொழுகைகளைப் பேணி வருவது மட்டுமின்றி குறித்த நேரத்தில் தொழுவதையும் அவர்கள் பேணி வந்தார்கள். மற்றவர்களிடமும் இதை வலியுறுத்தி வந்தார்கள். அவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்றால், தொழுகைக்கான நேரம் வரும்போது உளு செய்து பாங்கிற்காக காத்திருப்பார்கள். பாங்கிற்குப் பிறகு தம்மைச் சுற்றி இருக்கின்ற குழந்தைகளிடம், சிறுமிகளே! நான் தொழப் போகிறேன் நீங்களும் தொழுங்கள் என்று கூறுவார்கள்.

இவ்வாறு தமது செயல் முன்மாதிரியின் மூலமாக அறிவுரை கூறி வந்தார்கள். பாருங்கள்! அறிவுரைக்கு இதுதான் அனைத்தையும் விடச் சிறந்த வழிமுறையாகும்.

தம் குழந்தைகளுக்கு தொழுகையின் மொழியாக்கத்தையும் குழந்தைப் பருவத்தில் இருந்தே கற்றுக் கொடுக்க வேண்டியது தாய், தந்தையருடைய கடமையாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:


“....நேசத்துடன், இறைவணக்கத்தின் தொடர்பு இணைந்துள்ளது. சம்பிரதாய முறையில் மொழியாக்கத்தைக் கற்றுக் கொடுப்பதன் விளைவாக எவரிடத்திலும் இறை வணக்கம் உருவாகாது. எந்தத் தாய் தந்தையரின் உள்ளங்கள் இறைவணக்கத்தில் (மூழ்கி) இருக்குமோ, எவர்களுக்குத் தொழுகையுடன் நேசம் இருக்குமோ, அவர்கள் குழந்தைகளுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்தியவாறு மொழியாக்கத்தைக் கற்றுக் கொடுக்கும் போது குழந்தை தனது தாய் தந்தையரின் கண்களைப் பார்த்துக் கொண்டிருக்கும். அவர்களுடைய உள்ளங்களின் உஷ்ணத்தை அது உணர்ந்து கொண்டிருக்கும். அவர்களின் உணர்ச்சிகளினால் அக்குழந்தைக்குள்ளும் ஓர் உற்சாகம் உருவாகிக் கொண்டிருக்கும். அவ்வாறான பெற்றோர்கள் தொழுகையைக் கற்றுக் கொடுக்கும் போது அவர்கள் கற்றுக் கொடுக்கின்ற விதமும் வேறொன்றாக இருக்கும்........ ஒவ்வோர் அஹ்மதியும் தொழுகையினுடைய விவகாரத்தில் வேலை செய்ய வேண்டிய தேவை உள்ளது. உழைக்க வேண்டிய தேவை உள்ளது. தமது உள்ளத்தை இணைக்க வேண்டும். தம் அனைத்து இருப்பையும் இதில் இணைக்க வேண்டும். அப்பொழுதுதான் இறைவனுடைய பார்வையில் தொழக்கூடிய அந்த சந்ததிகள் உருவாகும்.” (ஜுமுஆ குத்பா 8 நவம்பர் 1985)

(தொடரும்)

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று, ரஹ்மானின் அடியானை உருவாக்குங்கள். குழந்தைப் பருவத்தில் இருந்து அல்லாஹ்வின் நேசத்தை உள்ளங்களில் உருவாக்கி விடுங்கள். (குழந்தைகள்) விஷயங்களைப் புரிய ஆரம்பிக்கும்போது அவர்களுக்கு எந்தப் பொருள் கொடுத்தாலும், இதை அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்துள்ளான் என்று கூறிக் கொடுங்கள். நன்றி செலுத்தக்கூடிய பழக்கத்தை உருவாக்குங்கள். எந்தப் பொருளை வேண்டினாலும் அல்லாஹ்விடம் வேண்ட வேண்டும் என்று கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய வையுங்கள்.**

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம் 7



தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 3. இஸ்லாமிய வரலாறு

26. (தாயிஃ.பிலிருந்து) ஏமாற்றத்துடனும் காயங்களுடனும் திரும்பி வந்த ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களைக் காண வந்த மலக்கு அவர்களிடம் கூறியது என்ன?

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்த மலக்கு ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களிடம் “உங்களை இவ்வளவு மோசமாக நடத்திய அந்த மக்களை அழிக்க வேண்டும் என்று விரும்புகிறீர் -களா?” என்று கேட்டார்கள்.

27. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அளித்த பதில் யாது?

“வேண்டாம். இவர்கள் இல்லாவிடினும் இவர்களது சந்ததியினராவது உண்மையை ஒப்புக்கொண்டு ஏக இறைவனை மட்டும் வணங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்” என்று பதிலளித்தார்கள்.

28. தாயிஃ.பிலிருந்து மக்கா திரும்பும் வேளையில் சற்று ஓய்வெடுப்பதற்காக ஒரு திராட்சை தோட்டத்தில் தங்கினார்கள். அங்கு ஒரு கிறித்தவ அடிமை இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். அவரது பெயர் என்ன?

அவரது பெயர் ‘ஆதாஸ்’ ஆகும். இவர் நினேவா நகரத்தைச் சேர்ந்தவர்..

29. ஹஸ்ரத பெருமானார் (ஸல்) அவர்களால் விடுதலை வாங்கித் தரப்பட்டு தமது வளர்ப்பு மகனாக அறிவிக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் ஸெய்து (ரலி) அவர்கள் ஆவார்கள்.

30. மக்காவில் நிராகரிப்பாளர்களின் எதிர்ப்பு எல்லை மீறியபோது எந்த நாட்டுக்கு முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்தனர்?

அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர். அப்போது அந்த நாடு ஒரு கிறிஸ்தவ மன்னரால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது.

31. அபிஸீனியாவில் அடைக்கலம் புகுந்தவர்களைத் திரும்ப அழைத்து வரும் பணிக்காக யாரை அனுப்பினார்கள்?

அடைக்கலம் புகுந்தவர்களைத் திரும்ப அழைத்து வரும் பணிக்காக மக்கத்தினர் உமர் இப்னு அல் ஆஸ் மற்றும் அபூ ராபியாவின் மகனான அப்துல்லாஹ் ஆகியோரை அனுப்பினர்.

32. அவர்களின் அழைப்பிற்கு அபிஸீனிய மன்னர் அளித்த பதில் யாது?

அபிஸீனிய மன்னர் அடைக்கலம் புகுந்த முஸ்லிம்களை அனுப்ப மறுத்து விட்டார்.

33. ‘அகபா உடன்படிக்கை’ பற்றி என்ன தெரியும?:

யாத்ரிபிலுள்ள முஸ்லிம்கள் ‘அகபா’ என்னும் இடத்தில் வைத்து ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைச் சந்தித்தனர். அவர்கள் தாங்கள் திருநபி (ஸல்) அவர்களுக்கு உண்மையான பற்றுடனும் விசுவாசத்துடனும் இருப்பதாகத் தெரிவித்தனர். இந்த உடன்படிக்கையை ‘அகபா’ உடன்படிக்கை என்கிறோம்.



இஸ்லாம் தோன்றுவதற்கு முன் யாத்ரிப் (மதீனா)

34. மக்காவில் வாழ்வது என்பது இயலாத அளவில் ஆன போது எந்த நகருக்கு ஹிஜ்ரத் செய்ய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முடிவெடுத்தார்கள்?

அவர்கள் ‘யாத்ரிப்’ என்று அழைக்கப்பட்டு பின்னர் ‘மதீனா’ என்று பெயர் மாற்றப்பட்ட நகருக்கு ஹிஜ்ரத் செய்ய விரும்பினார்கள். அங்கு ஏற்கனவே இஸ்லாம் பரவியிருந்தது.

35. மக்காவிலிருந்து மதீனா எவ்வளவு தூரத்திலுள்ளது?

மக்காவிலிருந்து மதீனா சுமார் 200 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

36. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்தபோது அவர்களுடன் சென்றது யார்?

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்றார்கள்.

37. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் வழியில் எங்கு தங்கினார்கள்?

அவர்கள் 'தவ்ர்' என்னும் குகையில் தங்கினார்கள்.



தவ்ர் குகை (உட்பகுதி)

38. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த குகையில் எவ்வளவு காலம் தங்கினார்கள்?

அந்த குகையில் இரு இரவுகளும் இரு பகல்களும் தங்கினார்கள்.

39. 'ஸுரகா பின் மாலிக்' என்பவர் யார்?

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களைப் பிடித்து அவர்களை மக்காவாசிகளிடம் ஒப்படைத்து அவர்கள் அளிக்கும் பெருமளவிலான வெகுமதியைப் பெறும் நோக்கத்தில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்தவர் ஸுரகா ஆவார்.

40. முஹம்மது (ஸல்) அவர்களைப் பிடித்து வருவோருக்கு மக்காவாசிகள் அறிவித்த வெகுமதி யாது?

நூறு ஒட்டகங்கள் வெகுமதியாக அறிவிக்கப் -பட்டிருந்தது.

41. பெருமானார் (ஸல்) அவர்களைத் துரத்தி வந்த ஸுரகாவிற்கு என்ன நேர்ந்தது?

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை ஸுரகா நெருங்கியபோது அவர் வந்த குதிரையின் கால் மண்ணில் புதைந்து கீழே விழுந்தது. அவர் அதிலிருந்து மீட்டெடுக்க தனது அம்பை எறிந்து அரபு முறைப்படி நற்பேற்றைச் சோதித்துப் பார்த்தார். அப்போது அது துரதிர்ஷ்டத்தைக் காட்டியது. எனினும் அந்த வெகுமதியை மனதிற் கொண்டு அவர் மீண்டும் முயற்சித்தார். அவர் மீண்டும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை நெருங்கியபோது அந்த குதிரை முன்போலவே மணலில் விழுந்தது. அவர் மீண்டும் தனது நற்பேற்றைச் சோதித்த போதும் முதலில் வந்த பதிலே வந்ததால் அவர் தனது முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

42. 'ஸுரகா பின் மாலிக்' எனபவர் குறித்து ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் முன்னறிவித்தது யாது?

"ஈரான் மன்னரின் தங்கக் காப்புகள் ஸுரகாவின் கைகளில் அணிவிக்கப்படும்". என்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது 16 வருடங்கள் கழித்து ஈரானியக் கருவூலங்கள் இஸ்லாமியப் பேரரசிடம் கிடைத்த போது இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.

43. 'அபூஜஹில்' என்பவர் யார்? அவரது உண்மையான பெயர் என்ன?

'அபூஜஹில்' என்பவர் இஸ்லாத்தின் எதிரி ஆவார். இவரது இயற்பெயர் 'அபுல் ஹகம்' (அறிவின் தந்தை) என்றிருந்தாலும் அவரது உண்மையான பெயர் 'உமர்' ஆகும்.

44. 'முஆக்கத்' (சகோதரத்துவம்) என்பது பற்றி என்ன தெரியும்?

மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த முஸ்லிம்களை உபசரித்து வாழ வைக்க வேண்டும் என்பதற்காக மதீனாவிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் மக்காவிலிருந்து வந்த ஒவ்வொரு முஸ்லிமையும் சகோதரர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். இதற்கு 'முஆக்கத்' என்று பெயர்.

45. ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் யாருடைய வீட்டில் தங்கினார்கள்?

ஹஸ்ரத் அபூ ஐயூப் அன்சாரி என்ற சஹாபியின் வீட்டில் தங்கினார்கள்.


கூபா பள்ளிவாயில்

46. ஹிஜ்ரத்திற்குப் பின்னர் கட்டப்பட்ட முதல் பள்ளிவாயில் எது?

ஹிஜ்ரத்திற்குப் பின்னர் முதலில் கட்டப்பட்ட பள்ளி -வாயில் ‘கூபா பள்ளிவாயில்’ ஆகும். இது மதீனாவி -லிருந்து இரண்டு மைல்கள் தூரத்தில் உள்ளது.

47. மக்காவாசிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நடந்த முதல் போரின் பெயர் என்ன?

பத்ர் போராகும்.

48. பத்ர் போர் எப்போது நிகழ்ந்தது?

ஹிஜ்ரத்திற்கு ஒரு வருடம் கழித்து பத்ர் போர் நடந்தது.

49. பத்ர் போரில் கலந்து கொண்ட முஸ்லிம்கள் எத்தனை பேர்? எதிரிகளின் எண்ணிக்கை என்ன?

முஸ்லிம்களின் எண்ணிக்கை 313 ஆகும். எதிரிகள் தரப்பில் 1000 பேர் கலந்து கொண்டனர்.

50. “நாங்கள் உங்களது வலது புறத்திலும் உங்கள் இடது புறத்திலும் போர் புரிவோம். உங்கள் முன்பிருந்தும் உங்கள் பின்பிருந்தும் போர் புரிவோம். எங்களது .இறந்த உடல்களை மிதித்தால் அன்றி உங்களை நெருங்க விடமாட்டோம்” என்று யார் எப்போது கூறினார்?

மக்காவாசிகள் போரிடும் நோக்கோடு மதீனா நோக்கி புறப்பட்டு வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன் மதீனத்து முஸ்லிம்கள் நகரிலிருந்து வெளியேறி எதிர் தாக்குதல் செய்வதா அல்லது தமது இடத்திலேயே அமர்ந்து எதிரிகளை எதிர்கொள்வதா என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆலோசனை செய்தபோது மதீனத்து முஸ்லிம்கள் கூறிய வார்த்தைகளே இவையாகும்.


பத்ர் போர்க்களம் – ஷஹீதுகள் அடக்கம் செய்யப்பட்ட பகுதி

(தொடரும்...)

## கிலாஃபத் தின வாழ்த்துக்கள்!



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்: “அல்லாஹ்வின் கலீஃபா பூமியில் இருப்பதை நீங்கள் அறிந்தால் உங்கள் உடல் நார்நாராகக் கிழிக்கப்பட்டாலும், உங்கள் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டாலும் நீங்கள் அவருடன் இணைந்து விடுங்கள்.” (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் ஹதீஸ் எண்: 22333)

### கிலாஃபத்தின் அருள்கள்

- ❖ மார்க்கத்தை உறுதிப்படுத்துதல்
- ❖ அமைதியை நிலைநாட்டுதல்
- ❖ இறைவணக்கத்தை உண்மையான முறையில் நிலைநாட்டுதல்
- ❖ கலப்பற்ற ஓரிறைமையை நிலைநாட்டுதல்
- ❖ மனிதத்துவத்திற்கு தொண்டு செய்தல்
- ❖ இஸ்லாத்தை தப்லீக் செய்தல்
- ❖ முன்னேற்றங்கள்
- ❖ ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுதல்
- ❖ வானத்தின் ஆதரவுகள்
- ❖ நம்பிக்கை கொண்ட ஜமாஅத்திற்கு வேதனையுடன் துஆ செய்யும் மகத்தான மக்களை உருவாக்குதல்
- ❖ ஆன்மீக வாழ்வு எஞ்சியிருத்தல்

(நூல்: கிலாஃபத்தின் மகத்தான அந்தஸ்தும் தகுதியும் அதன் அருள்களும்.... பக்கம் 35)

**27.05.2023**

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam